# செயலாற்றுகை அறிக்கை

# 2012

## அரச தொழில்முயற்சிகள் திணைக்களம் - நிதித்திட்டமிடல் அமைச்சு

## நிதித்திட்டமிடல் அமைச்சு

# தூர நோக்கு

**"இலங்கையில் அரச தொழில்முயற்சிகளின் நல்லாட்சியினை உறுதிப்படுத்தும் அதியுயர் நிறுவனமாக விளங்குதல்"**

# பணிக்கூற்று

**"பொது மக்களின் நலனைப் பாதுகாப்பதற்கும், அதி கூடிய செயலாற்றுகையினைப் பெற்றுக் கொள்வதற்குமான சிறந்த நடைமுறைகளின் ஊடாக அரச தொழில்முயற்சிகளின் நல்லாட்சியை ஸ்திரப்படுத்தல் "**

## உள்ளடக்கம்

1. அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் செயலாற்றுகை ........................................................................1

1.1 மேனோக்கு ........................................................................................................................................1

1.2 பௌதீக செயலாற்றுகை ..........................................................................................................................3

1.2.1 பங்கிலாபங்கள் ...................................................................................................................................3

1.2.2 அரச உடமை தொழில்முயற்தொழில்முயற்சிகளின் வேலைவாய்ப்புக்கள் ..........................................6

1.2.3 அரச தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு ...................................................6

2. அரசாங்க தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை..........................................................................7

2.1 மேனோக்கு ........................................................................................................................................7

2.2 சக்தி .....................................................................................................................................................9

2.3 நீர் ......................................................................................................................................................11

2.4 துறைமுகங்கள் ..................................................................................................................................13

2.5 பயணிகள் போக்குவரத்து .....................................................................................................................14

2.6 விமானச் சேவைகள் ...............................................................................................................................15

2.7 நிர்மாணம் ..........................................................................................................................................16

2.8அரச வங்கிகள் ......................................................................................................................................17

2.9 காப்புறுதி .............................................................................................................................................19

2.10 லொத்தர்கள் ........................................................................................................................................20

2.11 கால்நடை ............................................................................................................................................21

2.12 பெருந்தோட்டத்துறை .......................................................................................................................222

2.13 சுகாதாரம் ...........................................................................................................................................23

2.14 ஊடகம் ...............................................................................................................................................24

2.15 சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம் ....................................................................................................24

2.16 புதுப்பிக்க முடியாத வளங்கள் ...............................................................................................................25

2.17 அரச உடமை தொழில்முயற்சிகளின் இலாபத்தன்மை ...........................................................................26

2.18 மீள்கட்டமைப்புக்கட்பட்ட தொழில்முயற்சிகள் .....................................................................................28

2.19 ஆண்டறிக்கைகளை சமா்ப்பித்தல் - அரச உடமை தொழில்முயற்சிகள் ...............................................32

3. திணைக்களத்தில் பணி புரியும் அலுவலா்களின் இயலளவை விருத்தி செய்தல் ..........................................34

4. நிதி முகாமைத்துவம்.............................................................................................................................37

# 1. அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் செயலாற்றுகை

## 1.1 மேனோக்கு

“ மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்குடன் இலங்கையின் அரச உடமை தொழில் முயற்சிகளின் நல்லாட்சியினை உறுதிப்படுத்தும் அதி உயர் அரசாங்க நிறுவனமாக அரச தொழில்முயற்சிகள் திணைக்களம் விளங்குகின்றது. துறைமுகங்கள், விமானச் சேவைகள், நீர், மின்சாரம், சக்தி, வங்கியியல் மற்றும் காப்புறுதி போன்ற துறைகளின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச உடமை வர்த்தக தொழில் முயற்சிகள் தேசிய பொருளாதாரத்தில் உபாய ரீதியான பங்கொன்றை வகிக்கின்றன. 2005 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தின் தனியார்மயப்படுத்தாமை தொடர்பான கொள்கையின் நிலைப்பாட்டினைப் பொருத்த வரை அண்மைக் காலமாக ஒப்பீட்டளவில் அவைகள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. தொழில்முயற்சிகளின் விரும்பத்தக்க இலக்குகளை அடையும் நோக்குடன் அரச தொழில்முயற்சிகள் திணைக்களம், நல்லாட்சி தொடர்பான நடைமுறைகளின் விருத்தி, வளங்களின் வினைத் திறனானதும் பயனுறு விளைவுள்ளதுமான பயன்பாட்டினையும், உறுதிப்படுத்துகின்றது. இத்திணைக்களம் நிதிசார் ஒழுக்க நெறிகளை அமுல்படுத்தும் நோக்குடன் தொழில்முயற்சிகளுடன் தொடர்புடைய செயற்பாடுகள் மற்றும் நிதி முகாமைத்துவம், தொடர்பான வழிகாட்டல்களை அபிவிருத்தி செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றது.

மேலும், கூட்டு உடன்படிக்கைகளில் நுழைவதன் மூலம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை, போன்ற அரச உடமை தொழில்முயற்சிகளின் மனித வள அப்விருத்தியை விருத்தி செய்வதற்கு அரச உடமை தொழில்முயற்சிகளுக்கு இத்திணைக்களம் உதவியுள்ளது. சகல அரச உடமை தொழில்முயற்சிகளின் ஊழியர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதை 60 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. நன்கொடைகள் மற்றும் கடன்கள் உட்பட வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் ஊடாக அரச உடமை தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் அரச தொழிலமுயற்சிகள் திணைக்களம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

மேலும், குறிப்பிட்ட நிறுவனங்களின் கணக்காய்வு முடிவுகளைக் கருத்திற் கொண்டு அரச உடமை தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை தொடர்பான அறிக்கைகளை வழங்குவதன் மூலம் அரசாங்க தொழில்முயற்சிகள் குழுவுக்கு (COPE) இத்திணைக்களம் உதவியுள்ள அதே வேளை, 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் 41 அரசாங்க தொழில்முயற்சிகள் குழுக் கூட்டங்களுக்கும் சமூகமளித்தனர்.

**1.1.1** 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்திணைக்கள ஊழியர்கள் பங்கேற்ற அரசாங்க தொழில்முயற்சிகள் குழுக் கூட்டங்கள்

| இலக்கம் | நிறுவனத்தின் பெயர் | பட்டியலிடப்பட்ட திகதி | அறிக்கை |
|---|---|---|---|
| 1 | லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 23.02.2012 | √ |
| 2 | இலங்கை கிரிக்கட் | 24.05.2012 | இரத்துச் செய்யப்பட்டது |
| 3 | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 09.05.2012 | √ |
| 4 | இலங்கை மத்திய வங்கி | 06.07.2012 | √ |
| 5 | இலங்கை ரெலிகொம் பீஎல்சீ | 21.06.2012 | √ |
| 6 | தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் | 16.08.2012 | √ |
| 7 | வரையறுக்கப்பட்ட கொழும்பு வர்த்தக உரக் கம்பனி | 05.07.2012 | √ |
| 8 | இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம் | 24.07.2012 | √ |
| 9 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 17.07.2012 | √ |
| 10 | அசோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட். | 12.10.2012 | அவசியமற்றது |
| 11 | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 06.08.2012 | √ |
| 12 | நகர அபிவிருத்தி அதிகார சபை | 08.08.2012 | √ |
| 13 | அரச பயன்பாட்டு ஆணைக்குழு | 09.08.2012 | √ |
| 14 | தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை | 10.08.2012 | √ |
| 15 | மக்கள் வங்கி | 10.08.2012 | √ |
| 16 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 14.08.2012 | √ |
| 17 | இலங்கைக் காப்புறுதிச் சபை | 12.11.2012 | √ |
| 18 | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | 18.09.2012 | √ |
| 19 | இலங்கை முதலீட்டுச் சபை | 14.11.2012 | √ |
| 20 | ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை சபை | 21.09.2012 | √ |
| 21 | தெங்கு அபிவிருத்தி அதிகார சபை | 01.10.2012 | √ |
| 22 | செலசின் ரூபவாஹினி நிறுவனம் | 05.10.2012 | √ |
| 23 | அரச அச்சகக் கூட்டுத்தாபனம் | 12.10.2012 | √ |
| 24 | ஆயுர்வேத மருத்துவக் கூட்டுத்தாபனம் | 16.10.2012 | √ |
| 25 | ஊழியர் நம்பிக்கை நிதி | 24.10.2012 | √ |
| 26 | இலங்கைத் துறைமுக அதிகார சபை | 15.11.2012 | √ |
| 27 | இலங்கை மாநாட்டுப் பணியகம் | 16.11.2012 | √ |
| 28 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 16.11.2012 | √ |
| 29 | தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | 19.11.2012 | √ |
| 30 | இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் | 20.11.2012 | √ |
| 31 | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | 21.11.2012 | √ |
| 32 | அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | 05.12.2012 | √ |
| 33 | இலங்கை வங்கி | 22.11.2012 | √ |
| 34 | வரையறுக்கப்பட்ட மிகின் லங்கா கம்பனி | 26.11.2012 | √ |
| 35 | அபிவிருத்தி லொத்தர் சபை | 07.12.2012 | √ |

| | | | |
|---|---|---|---|
| 36 | இலங்கை மீன்பிடிகத் துறைமுகக் கூட்டுத்தாபனம் | 29.11.2012 | √ |
| 37 | அரச மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | 03.12.2012 | √ |
| 38 | இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை | 04.12.2012 | √ |
| 39 | நெல் சந்தைப்படுத்தும் சபை | 05.12.2012 | √ |
| 40 | வரையறுக்கப்பட்ட குருநாகலை பெருந்தோட்டக் கம்பனி | 06.12.2012 | √ |
| 41 | மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை | 07.12.2012 | √ |

*மூலம்: அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்*

மேலும், இத்திணைக்களம் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பிணைப்புடன் அரச உடமை தொழில்முயற்சிகள் தொடர்பான மீள்கட்டமைப்பு, மேம்பாடு, செய்முறையின் வகையீடு போன்றவை தொடர்பான 205 அமைச்சரவை விஞ்ஞாபனங்களை மீளாய்வு செய்ததோடு, விமர்சனங்களையும் வழங்கியது.

## 1.2 பௌதீகச் செயலாற்றுகை

### 1.2.1 பங்கிலாபங்கள்

அரச தொழில்முயற்சிகளிலிருந்து பங்கிலாபங்களாகவும் அறவீடுகளாகவும் கிடைக்கப் பெற்ற வருமானம் 2011 இல் ரூபா 24,562 மில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 27,549 மில்லியனாக 12.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பங்கிலாபங்களும் அறவீடுகளும் வரியல்லாத வருமானத்தில் 20 சதவீதமாகும். பெரும்பாலும் அனைத்து அரச வியாபார தொழில்முயற்சிகளும் நியாயமான சம்பாத்தியத்தினை பெறுகின்றன. அவை மொத்த .உள்நாட்டு .உற்பத்தியில் 43 சதவீத அதன் அடிப்படையினை கொண்டிருப்பதுடன் கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட அனைத்து கம்பனிகளை விடவும் மூலதனச் சந்தையில் மிகப் பெரியனவாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் 2000 இலிருந்து அரச தொழில் முயற்சிகளினால் அரசாங்கத்திற்கு கிடைத்த பங்கிலாபங்கள் மிகவும் குறைவாகவும் மேலும் முன்னேற்றமடைய வேண்டிய நிலையிலும் உள்ளது.

| | 2002 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **அறவீடு** | - | 1316 | 1434 | 1279 | 4471 | 4524 | 10379 | 12356 |
| தேசிய சேமிப்பு வங்கி | - | 810 | 1,060 | 1,060 | 1,750 | 2,312 | 4,560 | 8,260 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | - | 116 | 25 | - | 50 | - | - | 25 |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | - | 46 | 50 | 40 | 144 | 55 | - | 500 |
| அரச மரக் | - | 75 | 150 | 75 | 50 | 10 | 75 | 50 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கூட்டுத்தாபனம் | | | | | | | | |
| அரச மருந்தாக்க உற்பத்திக் கூட்டுத்தாபனம் | - | 25 | 30 | 40 | 30 | 85 | 59 | 20 |
| இலங்கை துறைமுக அதிகார சபை | - | 115 | 65 | - | - | - | - | - |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | - | | | | 2,250 | 2,000 | 3,495 | 4,200 |
| இலங்கை மின்சார சபை | - | - | - | - | - | 2,000 | - | - |
| பிற | - | 129 | 54 | 64 | 197 | 62 | 190 | 507 |
| பங்கிலாபங்கள் | 435 | 3,585 | 4,014 | 2,966 | 4,219 | 6,867 | 14,183 | 13,987 |
| இலங்கை வங்கி | - | 1,173 | 846 | 1,046 | 1,346 | 2,923 | 4,020 | 5,346 |
| மக்கள் வங்கி | - | 668 | 1,416 | 816 | 1,139 | 3,253 | 4,500 | 4,658 |
| ஸ்ரீ லங்கா டெலிகொம் | 300 | 670 | 893 | 893 | 893 | 223 | 536 | 759 |
| டி லா ரூ லங்கா (தனியார்) கம்பனி | 20 | - | 100 | 100 | 38 | - | 68 | 42 |
| இலங்கை கனிய மணல் கம்பனி | - | 98 | 50 | 34 | 60 | 35 | 500 | 1,700 |
| ,இலங்கை இன்டஸ்றியல் எஸ்டேட்ஸ் | 11 | 20 | 62 | 31 | 31 | 31 | 31 | 47 |
| சிலோன் பெற்றோலிய களஞ்சிய மேடை | - | - | 438 | - | - | - | - | - |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| விமான நிலைய விமான சேவைகள் கம்பனி | - | - | 100 | - | 200 | - | 2,406 | - |
| வெஸ்ட் கோஸ்ட் பவர் தனியார் கம்பனி | - | | | - | 392 | - | - | - |
| லங்கா மின்சாரக் கம்பனி | 100 | 100 | 75 | - | | 300 | - | 75 |
| பெருந்தோட்டக் கம்பனிகள்** | - | - | - | - | 30 | - | 212 | 179 |
| இலங்கை காப்பபுறுதிக் கூட்டுத்தாபனம் | - | - | - | - | - | - | 1,750 | 1,001 |
| இலங்கை விமான சேவைகள் | - | 788 | - | - | - | - | - | - |
| ஏனைய * | 4 | 68 | 34 | 46 | 90 | 102 | 160 | 180 |
| மொத்தம் | 435 | 4,901 | 5,448 | 4,245 | 8,690 | 11,391 | 24,562 | 27,549 |

மூலம்: பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

* சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு, தேசிய லொத்தர் சபை, அரச மரக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், அரச மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம், இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை தேயிலைச் சபை, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, லங்கா லேலேன்ட் லிமிட்டட், சிலோன் எக்ரோ இன்டஸ்ரீஸ் லிமிட்டட், கொழும்பு வர்த்தக உரக் கம்பனி, வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி, ரக்னாரக்சன லங்கா லிமிட்டட், லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி,

**சிலாபம், கலுபோவிட்டியான, எல்கடுவ, குருணாகல், நமுனுகுல. கேகாலை, அகலவத்தை, கொட்டகலை, பலாங்கொடை, வட்டவளை, ஹொறணை, எல்பிட்டிய மற்றும் புசல்லாவ பெருந்தோட்டங்கள்.

2012 இன்போது 74 தொழில் முயற்சிகளில் 42 வியாபார தொழில் முயற்சிகள் 2011 இல் காணப்பட்ட ரூபா 24,562 மில்லியனுக்கெதிராக பங்கிலாபங்கள் மற்றும் அறவீடுகளாக பெறப்பட்டன. எனினும் இவை அரச வங்கிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளினால் பெறப்பட்ட பங்கிலாப மாற்றல்களாக பெரும்பாலும் காணப்பட்டதுடன் மொத்த பங்கிலாப வருமானத்தில் 80 சதவீதமாகக் காணப்பட்டது. ஸ்ரீ லங்கா ரெலிகொம் மற்றும் லங்கா மினரல் சான்ஸ் என்பன 2011 இனைவிட 2012 இல் அதிக பங்கிலாபங்களை வழங்கியுள்ளன. எனினும் அரசாங்கம் தேசிய நீர்

வழங்கல் சபை, துறைமுக அதிகாரசபை மற்றும் விமான நிலைய அதிகாரசபை போன்ற பாரியளவு தொழில் முயற்சிகளிலிருந்து அவற்றினது முதலீடுகள் மூலதனத்தில் அதிகமாகவிருந்த போதும் பங்கிலாபங்களைப் பெற்றுக் கொள்ளாததுடன் இ.மி.சபை, இ.பெ.கூட்டுத்தாபனம் மற்றும் இ.வி.சேவைகள் என்பன பாரியளவு நட்டத்தை அடைந்தன.

தேசிய லொத்தர் சபை, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், அரச மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம், லங்கா மினரல் சான்ஸ் நிறுவனம், சிலாபம், குருநாகல் பெருந்தோட்டங்கள் போன்றன ஒப்பீட்டு ரீதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார தொழில் முயற்சிகள் அவற்றினது வியாபாரங்களை விரிவுபடுத்தியதுடன் 2011 இல் ரூபா 734 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 2,435 மில்லியன் வருமானத்தைப் பெற்றது. சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகளினால் எவ்வித பங்கிலாபங்களும் செலுத்தப்படவில்லை. எனினும், லக் சதொச மற்றும் லக்சல போன்ற தொழில் முயற்சிகளில் இலாபங்களில் நிலையான முன்னேற்றம் காணப்பட்டது.

### 1.2.2 அரச உடமை தொழில்முயற்சிகளின் வேலைவாய்ப்புக்கள்

அரச உடமை தொழில் முயற்சிகளின் மொத்த வேலைவாய்ப்பு 2011 ஐ விட ஏறக்குறைய ஒரு சதவீத சிறிதளவு அதிகரிப்புடன் 2012 இல் 251,278 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2012 இல் ஊழியர் ஒருவருக்கான சராசரி வருடாந்தச் செலவினம் 2011 இல் ரூபா 398,400 இலிருந்து ரூபா 469,185 ஆக அதிகரித்ததுடன் அதிகரித்த சம்பளங்கள் இதில் தாக்கத்தினை ஏற்படுத்தியது. அரச தொழில் முயற்சிகள் மத்திய அரசாங்கத்தின் ஊழியர்களுக்கான 6.8 சதவீத வருடாந்த சம்பள அதிகரிப்பு வீதத்தினை விட, 2012 இல் 2011 ஐ விட 17.7 சதவீத அதிகரிப்பொன்றினை பதிவாக்கியுள்ளது. இந்த அதிகரிப்பானது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை மின்சார .சபை, தேசிய நீர் வழங்கல் சபை மற்றும் இலங்கைத் துறைமுக அதிகார சபை என்பவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டதாகும். அனைத்து அரச தொழில் முயற்சிகளினதும் ஊழியர்களது கட்டாய இளைப்பாறல் வயது 1992 இல் மீள் கட்டமைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்திய வங்கிகளைத் தவிர 60 வருடங்களாக அதிகரிக்கப்பட்டது.

### 1.2.3 அரச தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு

அரச தொழில் முயற்சிகள் மானியங்கள் மற்றும் கடன்கள் உள்ளடங்கலாக வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் மூலம் ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன் 2011 ஐ விட 16 சதவீதத்தினால் ரூபா 32,216 மில்லியனாக அதிகரித்துள்ளதுடன் இலங்கை .மின்சார .சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை .விமான சேவைகள் என்பனவற்றிற்கு அரசாங்க உத்தரவாதம் வழங்கப்பட்டதுடன் வங்கி மூலங்களிலிருந்து நிதியளிப்புச் செய்வதற்கு ரூபா 321,220 மில்லியன் காணப்பட்டது. பெரும்பாலான தொழில் முயற்சிகள் அவற்றிற்கான வருமானத்தினை அதிகரித்ததுடன், நடைமுறைச் செலவு 2011 இல்

ரூபா 4,891 மில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 4,285 மில்லியனாக 12.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். முலதன மாற்றல்கள் 2011ஆம் ஆண்டில் ரூபா 23,618 மில்லியன்களிலிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 27,930 மில்லியன்களாக 18 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேநேரம் கடன் பெறல் தற்பொழுது இடம்பெறும் அரசாங்க முதலீட்டிற்கு ஒத்துழைக்கும் வகையில் ரூபா 37,544 மில்லியனாக அதிகரித்தது. மூலதன மாற்றல்கள் மற்றும் கடன் கணக்குகள் மூலதன வரவு செலவுத்திட்டத்தில் 3.5 சதவீதத்தினையும் மொத்த உள்நாட்டு .உற்பத்தியில் 1.2 சதவீதத்தினையும் பதிவாக்கியிருந்தது.

## 2. அரசாங்க தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

### 2.1 மேனோக்கு

துறைமுகங்கள், விமானச்சேவை, நீர், மின்சாரம்,பெற்றோலியம், வங்கித்தொழில் மற்றும் காப்புறுதி போன்ற தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்ற துறைகளில் பாரிய பத்து அரச உடைமை வியாபாரத் தொழில் முயற்சிகள் காணப்படுகின்றன. இத்தொழில் முயற்சிகள் தற்பொழுது செயற்பட்டு வரும் 55 தொழில் முயற்சிகளின் ஆதன அடிப்படையில் 95 சதவீதத்தினைக் கொண்டிருக்கின்றன. இலங்கைத் துறைமுக அதிகார சபை (இ.து.அ), விமான நிலைய, விமான சேவைகள் கம்பனி (வி.வி.சே), இலங்கை விமான சேவைகள் (இ.வி.சே), இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ), இலங்கை மின்சார சபை (இ.மி.ச) மற்றும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை (தே.நீ.வ.வ.ச) என்பன நிதிசாரா துறைகளின் அரச வர்த்தக தொழில்முயற்சிகளில் மிகைத்திருக்கும் அதே வேளை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன அரச தொழில் முயற்சிகளில் வங்கித் தொழில் மற்றும் காப்புறுதித் துறையினை மிகைத்திருக்கின்றன. 2005 இலிருந்து அரசாங்கம் தனியார் மயப்படுத்தாமைக் கொள்கையினைக் கடைப்பிடித்து வருகின்றது என்ற வகையில் லக் சதொச, லக்சல, இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், இலங்கை உரக் கம்பனி, மில்கோ, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை (தே.க.அ.ச), இலங்கைப் போக்குவரத்துச் சபை (இ.போ.ச) போன்ற பல தொழில் முயற்சிகள் அண்மைக் காலங்களில் ஒப்பீட்டு ரீதியில் பாரிய முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. போட்டிச் சந்தை சூழலில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் தேவை மற்றும் சிறிய நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களின் தேவை, லங்கா பொசுபேற்று, கனிய மணல் கூட்டுத்தாபனம் போன்ற இயற்கை வளங்களைக் கொண்டிருக்கின்ற அதேவேளை தேசிய பொருளாதாரத்தில் ஆதன அடிப்படையினையும் சந்தைப் போட்டித் தன்மையினையும் கவனத்திற் கொண்டு தொழில் முயற்சிகளினூடாக பின்தங்கிய பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு உரம் வழங்குதல் என்பன அவற்றினது முக்கிய பங்களிப்பினை நியாயமானளவு மேம்படுத்தியுள்ளன. இந்தத் தொழில் முயற்சிகள் போதியளவு பெரியனவாக இல்லாத போதிலும் அவற்றினது புரள்வு மட்டம் சிறிதாயினும் அவை தொடர்ந்தும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. பெரும்பாலான தொழில் முயற்சிகள் நிர்வாக மற்றும் வியாபார மாதிரிகளினை அரச தொழில் முயற்சிகள் மீதான குழுவின் சிபாரிசுகளுக்கமைய மேம்படுத்தி வருவதுடன் திறைசேரியினால்

மேற்கொள்ளப்பட்டுவரும் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏவ்வாறாயினும், ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதன் மூலம் முறைமைகள் மற்றும் நடவடிக்கைகளை பின்பற்றி பணிப்பாளர்கள் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் மீதான வகை கூறும் தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் மேலும் முன்னேற வேண்டிய தேவை காணப்படுகின்றது. சில தொழில் முயற்சிகள் அவற்றினது சந்தை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு வியாபார மீள் கட்டமைப்புச் செயல் முறைகளை மேற்கொண்டதும் நீண்டகால வருமான உழைப்புச் செயற்பாடுகளில் முதலீடுகளை செய்ததன் மூலம் ஐந்தொகையினை உறுதிப்படுத்தியதும் ஊக்குவிக்கத்தக்க விடயமாகக் காணப்படுகிறது. ஆயினும், சில தொழில் முயற்சிகள் மூலதன உள்ளீடு மற்றும் உயர் தொழில்நுட்ப சேவைகளையும் அவற்றினது ஆற்றல்களை வெளிக்காட்டுவதற்கான முகாமைத்துவத் திறன்களையும் வேண்டி நிற்கின்றன. இப்பின்னணியில், தலைவர், பணிப்பாளர்கள் சபை மற்றும் பிரதான அலுவலர்களிடமிருந்து குறிப்பிடத்தக்களவு உயர் தொழில் தராதரங்களும் திறமைகளும் பெறப்பட வேண்டியுள்ளன.

ஏறக்குறைய 55 அரச தொழில் முயற்சிகளின் தொழிற்பாடு போட்டித் தன்மை மிக்க சந்தைப் பொருளாதாரச் சூழலில் இடம்பெறுகின்றது. பெரும்பாலும் உள்நாட்டுத் தனியார் தொழில்முயற்சிகள் வெளிநாட்டுத் தொழில்முயற்சிகளை விட ஒப்பீட்டு ரீதியில் உறுதியானவையாகும். வங்கித் தொழில் மற்றும் காப்புறுதி போன்ற துறைகள் தரச் செயலாற்றுகை, நிறுவன ஸ்திரத்தன்மை மற்றும் நியாயமான போட்டித் தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அரச வங்கிகள் மற்றும் இ.கா. கூட்டுத்தாபனம் என்பன போட்டிச் சந்தையில் தொடர்ந்தும் உறுதியாகக் காணப்படுகின்றன. விவசாயம், சில்லறை வியாபாரம், ஊடகம், போக்குவரத்து போன்ற பொருளாதாரத் துறைகள் பலவற்றில் சிறந்த தொழிற்பாடுகள் நியாயமான சேவை வழங்கல் முறைமையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் மூலம் வழங்கப்படுவதுடன் சந்தைத் தொழிற்பாடுகள் மாத்திரம் குறைந்த வருமான குழுக்களை பாதுகாப்பதற்கு போதியதாக இருக்காது என்பதுடன் நாட்டின் நெருக்கடியான துறைகளிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பெரும்பாலான தொழில் முயற்சிகள் அவற்றினது செயலாற்றுகையில் முன்னேற்றத்தினைக் காட்டியுள்ளதுடன் சில அவற்றினது சந்தைப் பங்கில் நட்டமடைந்துள்ளதுடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டிய நிலையிலும் காணப்படுகின்றன. அவற்றினது முகாமைத்துவங்கள் அவற்றை சிறந்த அர்ப்பணிப்பில் ஈடுபடுத்துவதற்கும் உறுதியான சந்தைப் பங்கொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட நியாயமான பங்களிப்பினை வழங்குவதற்கும் பல்வேறுபட்ட மாற்றங்களை வேண்டி நிற்கின்றன. உரித்து மாற்றங்களில் தங்கியிருப்பது இவ்வாறான மாற்றங்களுக்கு நன்மையளிக்க மாட்டாது.

சிறிய தொழில் முயற்சிகள் பல அவற்றினது ஆற்றலினை விடக் குறைவாக செயற்படுகின்றன

அல்லது சமூகப் பொருளாதாரப் பங்களிப்பினை மேற்கொள்ளாது இருக்கின்றன என்ற வகையில் முதலீடு மற்றும் மறுமலர்ச்சித் திட்டங்கள், ஒருங்கிணைத்தல் சில சமயம் தீர்த்துக்கட்டல் நடவடிக்கைகள் உட்பட மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமென்பதை அரச தொழில் முயற்சிகள் மீதான குழு பரிந்துரை செய்துள்ளது. அவை அட்டவணை 2.18 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 2.2 சக்தி

நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் தூய மற்றும் தாங்கிக்கொள்ள முடியுமான சக்தி மூலங்களின் அபிவிருத்தியினூடாக சக்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாக அரசாங்கத்தின் சக்திக் கொள்கை காணப்படுகின்றது. இப்பின்னணியில் 2005-2012 காலப்பகுதியில் முதலீடுகள் ரூபா 224,127 மில்லியனாக விரிவாக்கப்பட்டுள்ளதுடன் மின் உற்பத்தி, பகிர்வு மற்றும் வழங்கல் மீதான நாட்டின் உட்கட்டமைப்பினை தரமுயர்த்துவதாக காணப்பட்டது. மின்சாரத்தின் மொத்த உற்பத்திக் கொள்ளளவு 2002 இல் 1,930MWஇலிருந்து 2012 இல் 3,612MWஆக 87 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது தொடர்பில் பிரதான மைக்கல்லாக புத்தளத்தில் உருவாக்கப்பட்ட 300 ஆறு செலவு குறைந்த நிலக்கரி மின் உற்பத்தி நிலையமும் மேல் கொத்மலையில் நிர்மாணிக்கப்பட்ட 125 மெவோ நீர் மின் உற்பத்தி நிலையமும் மின் உற்பத்திக்கான எரிபொருள் செலவினை குறைவடையச் செய்தன. 2014 இன் ஆரம்பத்தில் மேலுமொரு 600 மெவோ நிலக்கரி மின் உற்பத்தி தொகுதிக்கான வேலைகள் புத்தளத்தில் இடம்பெற்று வருகின்றது

2002 இல் 17.3 சதவீதமாகக் காணப்பட்ட முறைமை இழப்பானது 2012 இல் 11.7 சதவீதமாக குறைவடைந்ததுடன் மின்சார விரிவாக்கல் 2012 இல் 93 சதவீத குடும்பங்களுக்கு விரிவாக்கப்பட்டதுடன் இது 2002 இல் 65 சதவீதமாகக் காணப்பட்டதுடன் அனைவருக்கும் மின்சாரத்தினை வழங்குகின்ற நடுத்தரக்கால நிதி நிலைமைகளை முன்னேற்றுவதற்கான சரியான பணிப்புரையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2012 இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளின்போது காணப்பட்ட நீண்ட வரட்சியானது நீர் மின் உற்பத்தி திறனை பலவீனப்படுத்தியதுடன் சர்வதேச எண்ணெய் விலைகள் அதிகரித்ததன் காரணமாக எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களில் தங்கியிருக்கும் நிலைமை காணப்பட்டதினால் இ.மி.சபையின் செயற்பாட்டு நட்டம் 2012 பெப்ரவரியில் மின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோதும் ரூபா 61 பில்லியனாக அதிகரித்ததுடன் 2012 இல் எரிபொருள் மானியம் வழங்கியதன் மூலம் இ.பெ.கூட்டுத்தாபனம் ரூபா 54 பில்லியனை செலவிட்டுள்ளது.

பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வி 2012 இல் 5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. போக்குவரத்துத் துறையானது மொத்த பெற்றோலிய பொருட்கள் நுகர்வில் 56 சதவீதமாகக்

காணப்பட்ட அதேவேளை மின்சாரத்துறையானது 25 சதவீதமாகவும் 2011 இல் காணப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளுக்கான 20 சதவீதக் கேள்வியினை உயர் வளர்ச்சியினைப் பதிவாக்கிய அதேவேளை நீர் மின் உற்பத்தி கொள்ளளவு 20 சதவீதத்தினால் குறைவடைந்தது.

இதன் காரணமாக 2011 இல் 4,795 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் 2012 இல் 5,037 மில்லியன் ஐ.அ.டொலர் செலவில் சர்வதேச எண்ணெய் விலைகள் உயர்ந்த மட்டத்தில் பீப்பாய் ஒன்று 110 ஐ.அ.டொலராகக் காணப்பட்ட போதிலும் எண்ணெய் இறக்குமதியினை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

உலக எண்ணெய் விலைகள் பீப்பாய் ஒன்று 95 ஐ.அ.டொலரிலிருந்து 125 ஐ.அ.டொலராக தளம்பல் அடைந்ததனால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய் சராசரியாக பீப்பாய் ஒன்று 114.73 ஐ.அ.டொலராக இறக்குமதி செய்யப்பட்டது. பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியில் அதிகரிப்பு, ஈரானிய எண்ணெய்க்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக சுத்திகரிப்பு பணிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கியதன் விளைவாக இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களை 2011 இல் 3.50 மில்லியன் மெ.தொன்னிலிருந்து 2012 இல் 3.95 மில்லியன் மெ.தொன்னாக இ.பெ.கூட்டுத்தாபனம் அதிகரித்தது. இ.பெ.கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பில் திறன் பயன்பாடு 2011 உடன் ஒப்பிடுகையில் 2012 இல் 33 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இக்காரணிகள் இ.பெ.கூட்டுத்தாபனத்தின் நிதி இழப்பினை ரூபா 89 பில்லியனாக (இ.மி.சபையின் மானிய எரிபொருள் வழங்கல் ரூபா 54 பில்லியன் உள்ளடங்கலாக) அதிகரித்ததுடன் 2012 டிசெம்பரிலும் 2012 பெப்ரவரியிலும் பெற்றோலியப் பொருட்களுக்கான விலைகள் அதிகரித்தன.

வருடமொன்றிற்கு 7 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ள மின்சாரத்தின் விரிவாக்கம் மற்றும் 2013-2015 காலப்பகுதியில் வருடமொன்றிற்கு 10 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கேள்வி என்பவற்றின் பின்னணியில் பெற்றோலியத்திற்கான கேள்வி வருடமொன்றிற்கு ஆகக் குறைந்தது 9 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு கொள்ளளவு 40 வருடங்களுக்கு முன்னர் பொருத்தப்பட்ட நாளொன்றுக்கு 25,000 பீப்பாய் என்ற கொள்ளளவைக் கொண்டிருப்பதுடன் பெற்றோலுக்கான கேள்வியில் 50 சதவீதத்தினையும் டீசலுக்கான கேள்வியில் 40 சதவீதத்தினையும் பார எரிபொருள், தார் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றிற்கு முழுமையான கேள்வியினையும் 2005 இல் பெற்றோல் 28 சதவீதமாகவும் டீசல் 18 சதவீதமாகவும் தார், பார எரிபொருள், மண்ணெண்ணெய் என்பவற்றிற்கான கேள்வி இறக்குமதிகளிலும் தங்கியிருந்தது. சுத்திகரிப்பு வெளியீடானது உட்கட்டமைப்பு வயது ஒத்துழைப்பின் அடிப்படையில் அதன் வெளியீட்டினை 2012 இல் 1.5 மில்லியன் மெற்றிக் தொன்களாக வீழ்ச்சியடைந்ததுடன் சுத்திகரிப்பில் போதிய முதலீடு காணப்படாததனால் 2.0 மில்லியன் மெற்றிக் தொன்களாகவும் காணப்பட்டமை இ.பெ.கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டினை பலவீனப்படுத்தியதற்கு முக்கிய காரணமாகும்.

## 2.3 நீர்

பாதுகாப்பான குடிநீர் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதியினை வழங்குவது அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தி நோக்கமாகும். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது (தே.நீ.வ.வ.ச.) மாத்திரம் பாதுகாப்பான குடிநீர் உள்ளடக்கத்தில் 35 சதவீதத்தினைக் கொண்டிருப்பதுடன் 2016 அளவில் 46 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான குடிநீர் 2011 இல் 2 சதவீதத்திலிருந்து 2012 இன் இறுதியளவில் 84 சதவீதமாக நாடு முழுவதையும் உள்ளடக்கிய வகையில் அதிகரித்தது. இது 2016 அளவில் 94 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சமுதாய அடிப்படை நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் 8 சதவீதமானவற்றைக் கொண்டிருப்பதுடன் மிகுதி 41 சதவீதமான மக்கள் கிணறுகள், கைப்பம்பிகள், குழாய்க் கிணறுகள், மழை நீர் மற்றும் நீர் ஊற்றுகள் போன்ற நீர் மூலங்களிலிருந்து குடிநீரினைப் பெற்றுக் கொள்கின்றன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது 2011 இல் 490 மில்லியன் கண மீற்றர்களிலிருந்து 2012 இல் 526 மில்லியன் கண மீற்றர்களாக 7 சதவீதத்தினால் அதிகரித்தது. 337 நீர் வழங்கல் திட்டங்களின் ஊடாக ரூபா 8,826 மில்லியன் செலவினத்தில் இது மேற்கொள்ளப்பட்டது. ஒரு கன மீற்றர் நீருக்கான செலவினம் 2011 இல் ரூபா 14.86 இலிருந்து 2012 இல் ரூபா 16.80 ஆக 13 சதவீதத்தினால் அதிகரித்தது. 2012 இறுதியளவில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மேற்கொள்ளப்பட்ட பாரியளவு முதலீடுகள் காரணமாக நீர் உற்பத்தி திறன் கொள்ளளவானது 185,791 கண மீற்றர்களாக அதிகரித்தது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு.சபையானது நீர் இணைப்புக்கள் மற்றும் பௌசர்கள் மூலம் 2011 இல் 342 மில்லியன் கண மீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 2012 இன் போது 368 மில்லியன் கன மீற்றர்களாக 8 சதவீதத்தினால் அதிகரித்தது. தே.நீ.வ.வ. சபையின் வருமானம் 2011 இல் காணப்பட்டதை விட 11 சதவீதமாக 2012 இல் ரூபா 15,333 மில்லியனால் மில்லியனைப் பதிவாக்கியது. நீர் விற்பனை மொத்த வருமானத்தில் 85 சதவீதமாக ரூபா 13,106 மில்லியனைக் கொண்டிருந்தது. பாதுகாப்பான குடிநீர் கிடைக்கச் செய்வதனை உறுதிப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக தே.நீ.வ.வ. சபையானது 2012 இல் மொத்த நீர் இணைப்புகளை 138,362 ஆக அதிகரித்தது.

எவ்வாறாயினும் 2012 இல் வருமானம் அல்லாத நீர் 157 மில்லியன் கன மீற்றர்களாக பதிவாகியதுடன் நீர்வழங்கல் முறைமையில் கசிவு காரணமாக தொடர்ந்து இடம் பெற்ற நீர் விரயம் மொத்த உற்பத்தியில் 29.9 சதவீதமாகும். சபையானது 2008 இல் காணப்பட்ட 34 சதவீதத்திலிருந்து 2012 இல் 29.9 சதவீதமாக வருமானமல்லாத நீர் விரயத்தினைக் குறைத்தது. சர்வதேச எடுத்துக்காட்டாக நீர் விரயத்தினை ஆகக் குறைந்தது 12 சதவீதமாக குறைப்பதற்கு சபையினால் முடியுமாயின் சபை ஏறக்குறைய 10 சதவீதமாகக் காணப்படும் நாட்டின் குடிநீர் தேவைக்கு 94 மில்லியன் கன மீற்றர் நீரினை விற்பனை செய்வதன் மூலம் தேறிய வருமானமாக வருடமொன்றுக்கு 3,452 மில்லியன் ரூபாவினைப் பெற முடியும்.

2012 இல் வழங்கப்பட்ட 25 சதவீத சம்பள அதிகரிப்பின் காரணமாக மொத்தச் செலவினமானது 2011 இனை விட 37 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் சபை முன்னைய வருடத்தில் பெற்ற 421 மில்லியன் ரூபாவினை விட ரூபா 578 மில்லியனை நட்டமாக அடைந்தது. ரூபா 3,898 மில்லியன் செலவில் பேணப்பட்ட பங்குகளானது பங்குச் சந்தை நிலைமையில் பாதகமான தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தியதுடன் சபையானது திறைசேரிக்கு கடன் மீள் கொடுப்பனவை மேற்கொள்ள முடியாது போனதுடன் திறைசேரிக்கான நிலுவை 2011 இல் காணப்பட்ட ரூபா 3,704 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2012 இன் இறுதியில் ரூபா 5,281 மில்லியனாக அதிகரித்தது. தே.நீ.வ.வ. சபையானது 2012 இன் இறுதிப் பகுதியில் கட்டணத் திருத்தத்தினை மேற்கொண்டதுடன் அலகொன்றிற்கு வாசல் படி மற்றும் கட்டண நீர் செலவினத்திற்கு இடையில் இடைவெளி நிரப்பும் வகையில் 33 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டு நுகர்வோர் கட்டணத்தில் 25 அலகுகள் வரை அதிகரிப்பு மொத்த உள்நாட்டு நுகர்வில் 85 சதவீதமாக காணப்பட்ட போதிலும் இது 1.2 மில்லியன் அடிப்படையினைக் கொண்டிருப்பதுடன் வருடந்தோறும் ரூபா 3,290 மில்லியனைக் கொண்ட அலகொன்று ரூபா 9 இலிருந்து 30 வரையுமான மானியம் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றது.

2012 இன்போது 72 சதவீதமான நீர் நுகர்வுகள் உள்நாட்டுத் துறையில் 368 மில்லியன் அலகுகளாக அதிகரித்துள்ளதுடன் மீதி 28 சதவீதம் கைத்தொழிற் துறையினால் நுகரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உள்நாட்டுத் துறையானது வருமானத்தில் 55 சதவீதத்தினை ரூபா 8,265 மில்லியனை பங்களித்துள்ள அதேவேளை, கைத்தொழிற் துறையானது மொத்த வருமானத்தில் 45 சதவீதமாக ரூபா 6,017 மில்லியன் இலாபத்தினைப் பெற்றது

அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட துரிதமான முன்னேற்ற உபாயமானது நீர் இணைப்புக்களை மாத்திரம் விரிவுபடுத்தாததுடன் 2016 அளவில் வருமானமல்லாத நீர் விரயத்தினை 20 சதவீதமாக தடுப்பதன் மூலம் நடுத்தர காலத்தில் ஐந்தொகையினை உறுதிப்படுத்தி 2013 இலிருந்து வருமான மிகையொன்றினை ஏற்படுத்துவதற்கு முடியுமாக இருக்கும். சபையின் நிலையான தன்மை பாரியளவு தங்கியிருப்பதுடன் இது ஏறக்குறைய 106.4 பில்லியனுக்கு மேற்பட்ட பாரிய கருத்திட்டங்களை முகாமை செய்வதுடன் தொழிற்பாட்டுச் செலவினத்தில் நான்கில் ஒன்றினை கொண்டிருந்தன.

2012 இன் இறுதியில் தே.நீ.வ.வ. சபையின் கருத்திட்டங்கள் 26 காணப்படுவதுடன் அவை பல்வேறுபட்ட கருத்திட்ட சுற்றுக்களைக் கொண்டுள்ளன. 2005 - 2012 காலப்பகுதியின் போது சபையானது 36 பிரதான நீர் கருத்திட்டங்களை நிறைவு செய்திருப்பதுடன் வருடமொன்றிற்கு நீரின் உற்பத்திக் கொள்ளளவானது 552,609 மில்லியன் கண மீற்றர்களாக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் பணிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிட்டுள்ள காலத்தில் பல கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளமை, சில கருத்திட்டங்கள் 100 சதவீத செலவின மதிப்பீட்டினை மிஞ்சியிருப்பதுடன் அடிப்படை நேரத்தையும் விஞ்சியுள்ளன. நீர் கருத்திட்டங்களின் செலவின அதிகரிப்பிற்கு கருத்திட்டங்கள்

வடிவமைக்கப்படும் பொழுது மேற்கொள்ளப்படுகின்ற சாத்தியவள ஆய்வுகள் பலகீனமானதாகக் காணப்படுவதுடன் முறையற்ற கருத்திட்ட முகாமைத்துவமும் காரணங்களாகும். பல கருத்திட்டங்களில் தேசிய வரவு செலவுத்திட்டத்தில் மேலதிக செலவினங்கள் சுமையினை ஏற்படுத்துவதனால் கருத்திட்டங்களுக்கான மேலதிக நிதி ஒதுக்கீடுகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. சபையானது குழாய்கள், குழாய் இணைப்புகள் போன்றவற்றினை சேமித்து வைத்திருப்பதன் மூலம் அசையாத பொருட்களில் பணத்தினை முடக்கி வைத்திருப்பது இறுக்கமான திரவத் தன்மையின் அதிகரிப்புக்கு காரணமாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முறையான இறுப்புக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் செலவினக் கணக்கீட்டு முறைமை காணப்படாததன் விளைவாக சபையானது அதன் வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு முடியாதுள்ளது. தொழில் முயற்சி மூலதனத் திட்டமிடலை தாபித்தல் செலவினக் கணக்கீட்டு கண்ணோட்டங்களை உள்ளடக்கியுள்ளதுடன் முதலீடுகள் வருமானமற்ற நீரினை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் சிறந்த கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த கொள்வனவு முறைமை என்பன சபையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதுடன் வினைத்திறன் மிக்க சேவை வழங்குனர் என்ற வகையில் நிதியியல் ரீதியாக உறுதியான நிறுவனம் ஒன்றாக தொழிற்பட முடியுமாக இருக்கும்.

### 2.4 துறைமுகங்கள்

நாட்டின் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு நாட்டினை உலகத்தில் சமுத்திர ரீதியாகவும் சர்வதேச வியாபாரத்திற்கான மையமாகவும் மாற்றுகின்ற முழுமையான இட அமைவினை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் துறைமுகங்களின் அபிவிருத்தியினை முக்கிய நோக்காகக் கொண்டு அரசாங்கத்தின் கொள்கை வேலைச்சட்டகம் காணப்படுகின்றது. இந்நோக்கத்தினை அடைந்துகொள்வதற்கு கொழும்புத் துறைமுகத்தினை பிராந்தியத்தில் கப்பற் போக்குவரத்திற்கான மையமாக மாற்றுவதுடன் சேவைகள் மற்றும் கைத்தொழிற் துறைமுகமாக மாகம் றுஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தினை நிர்மாணித்தல் மற்றும் பல்நோக்கு வர்த்தக மையமாக அதனை மாற்றுதல், காலி துறைமுகத்தினை கப்பற் பிரயாணிகளுக்கான நிலையமாகவும் திருகோணமலைத் துறைமுகத்தை சூழல் நட்பு, கலியாட்ட மற்றும் வர்த்தக துறைமுகமாக மாற்றுதல் உள்ளடங்கலாக பல்வேறு உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள் இலங்கை துறைமுக அதிகார சபையினால் (இ.து.அ.சபை) செயற்படுத்தப்பட்டுள்ளன. ஒலுவில் மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்கள் கடற்கரைகளை இணைத்த இலங்கையின் துறைமுகங்கள் பிராந்திய வர்த்தக துறைமுகங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அரசாங்கத்தின் முதலீட்டு உபாயத்தினை பேணும் வகையில் 20005- 2012 காலப் பகுதியின்போது ரூபா 74,650 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்திட்டங்கள் மூலம் ஹம்பாந்தோட்டைப் புதிய துறைமுகம் மற்றும் கொழும்புத் துறைமுகம் என்பவற்றின் கடற்கரையினை இணைத்ததாக கொழும்பு துறைமுக விரிவாக்கற் கருத்திட்டம் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் மூன்று புதிய இறங்குதுறைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் முதலாவது கட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி வர்த்தக தொழிற்பாட்டுக்கான சந்தை வசதிகளை ஏற்படுத்துகின்றது. கொழும்பு துறைமுக விரிவாக்கல் கருத்திட்டத்திற்கான முதலீடுகள் 400 மில்லியன் ஐ.அ.டொ.செலவில் அலைதாங்கி வசதியினை விருத்தி

செய்யும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் அரச - தனியார் பங்களிப்புகள் பெறப்பட்டுள்ளதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து 300 மில்லியன் ஐ.அ. டொலர் கடனும் பெறப்பட்டுள்ளது. ஐ. அ. டொ 500 மில்லியன் பெறுமதியான முதலாவது இறங்கு துறை அபிவிருத்தி மீதான வெளிநாட்டு நேரடி முதலீடு 2013 செப்டம்பரில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 2.5 பயணிகள் போக்குவரத்து

பயணிகள் போக்குவரத்தானது மொத்த மோட்டார் வாகனப் போக்குவரத்தில் 60 சதவீதமாகக் காணப்படுவதுடன் பொது மக்களின் மிகப் பெரும்பாலானாவர்களின் போக்குவரத்துச் சாதனமாகவும் காணப்படுகின்றது. பேரூந்துப் போக்குவரத்தானது அரச மற்றும் தனியார் பேரூந்துகள் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் ஏறக்குறைய 55 சதவீதமான சேவையினை வழங்குகின்றது. இலங்கைப் புகையிரத சேவையானது எஞ்சிய 5 சதவீதத்தினை வழங்குகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையானது 4,779 பேரூந்துகளைக் கொண்டிருப்பதுடன் சந்தையில் 23 சதவீதத்தினைப் பிரதிபலிக்கின்ற அதேவேளை எஞ்சியது 19,699 பேரூந்துகளைக் கொண்ட தனியார் துறையினால் வழங்கப்படுகின்றது. 3,200 பாதைகளில் தொழிற்படுகின்ற இ.போ.சபை காலி - கொழும்பு, தெற்கு அதிவேகப் பாதை, பொலன்னறுவை - அம்பாறை பெருந்தெருக்கள் மற்றும் எம்பிலிப்பிட்டிய - கதிர்காமம் பெருந்தெரு என்பவற்றில் 2012 இல் புதிய சேவைகளை ஆரம்பித்துள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபையானது கிராமியப் பிரதேசங்களுக்கு அதன் சேவைகளை வழங்குவதுடன் தனியார் துறை இயக்குநர்களுக்கு கவர்ச்சியற்ற வருமானம் ஈட்டாத பாதைகளிலும் சேவைகளை வழங்குகின்றது.

இலங்கை போக்குவரத்து சபை சேவைகளைப் பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை 2011 உடன் ஒப்பிடுகையில் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தபோதிலும், மொத்த வருமானத்தில் 90 சதவீதத்தினைக் கொண்டிருக்கின்ற பற்றுச் சீட்டு வருமானம் 2011 இல் காணப்பட்ட ரூபா 15,175 மில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 18,209 மில்லியனாக 20 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பாதை பற்றுச்சீட்டு வருமானம் அதிகரிப்பதற்கு பிரதான காரணம் 2012 பெப்ரவரியில் பேரூந்துக் கட்டணங்கள் 20 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டமையாகும். இலங்கை போக்குவரத்துச் சபையானது வருமானமல்லாத பாதைகளில் தொடர்ந்து சேவை வழங்குவதுடன் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக/ தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான சேவைகளை முறையே 90 மற்றும் 70 சதவீத சலுகை விகிதங்களில் வழங்குவதற்காக அரசாங்கம் 2012 இல் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் மூலம் ரூபாய் 3,750 மில்லியனை மாற்றீடு செய்துள்ளது.

மொத்தச் செலவினம் 2011 இல் ரூபா 24,126 மில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 30,137 மில்லியனாக அதிகரித்தது. இலங்கை போக்குவரத்து சபையின் மிக அதிகமான செலவினமாக எரிபொருள் செலவினம் 2011 இல் ரூபா 7,997 மில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 11,406 மில்லியனாக அதிகரித்தது. சம்பளங்களுக்கான செலவினம் 2012 மார்ச்சில் 37 சதவீதமாக

அதிகரித்ததுடன் 2011 இல் ரூபா 10,167 மில்லியனிலிருந்து 2012 இல் 13,224 மில்லியனாக அதிகரித்ததுடன் 2011 இல் ஊழியர் ஒருவர் ரூபா 8,430 இலிருந்து 2012 இல் ரூபா 11,730 இனை ஆகக் குறைந்த சம்பளமாகப் பெற்றார். குறித்த வருடத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களது எண்ணிக்கை 2011 இல் 34,263 இலிருந்து 33,806 ஆக ஒரு சதவீதத்தினால் குறைவடைந்தது. ரூபா 820 மில்லியன் வரவு செலவுத்திட்ட மில்லியன் ஒதுக்கீடுகளில் இலங்கை போக்குவரத்துச் .சபையின் பேரூந்து தொகுதியினை அதிகரிப்பதற்காக ரூபா 560 மில்லியன் பயன்படுத்தப்பட்ட அதே வேளை மீதி முறையான திட்டமிடல் காணப்படாமையினால் பயன்படுத்தப்படவில்லை. 2012 சனவரியிலிருந்து தெற்கு அதிவேகப் பாதையில் 12 பேரூந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 267 புதிய பேரூந்துகளும் 306 முழுமையாக திருத்தப்பட்ட பேரூந்துகளும் 2012 இன் இறுதியில் சபையின் பேரூந்து தொகுதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் மொத்தமாக 4,779 ஆக அதிகரிக்கப்பட்டது

சபையானது நியதிச்சட்ட கொடுப்பனவுகளை செலுத்த முடியாத நிலையில் இருப்பதன் காரணமாக திரவத்தன்மை தொடர்பான விடயங்களில் ரூபா 1,700 மில்லியன் மேலதிகக் கட்டணங்களாக செலுத்த வேண்டியேற்பட்டது. இந்த வகையில் 2012 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்துக்கமைவாக இ.போ.சபை சுய-ஸ்திரத்தன்மையினை அடைவதற்கு மீள் கட்டமைப்பு திட்டமொன்றினை தயாரித்து வருகின்றது. தற்பொழுது தொழிற்பட்டு வரும் பேரூந்து தொகுதியினை 2013-2015 காலப்பகுதியில் ரூபா 4,840 மில்லியன் முதலீட்டுடன் மாற்றீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இ.போ.சபை அதன் சொந்தமாக போதிய ஒதுக்குகளை கொண்டிராததனால் விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திக்கான முதலீடுகள் நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

## 2.6 விமானச் சேவைகள்

விமானச் சேவை துறையினை வசதியளிப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் வியாபார மீள் கட்டமைப்பு என்பன அரசாங்கத்தின் பிரதான முன்னுரிமை நடவடிக்கையாகும். இலங்கை விமான சேவை மற்றும் மிஹின் லங்கா என்பன இரண்டு விமானங்களை இயக்குவதுடன் இலங்கை விமான சேவைகள் கம்பனி உட்கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்பான சேவைகளை வழங்குகின்றது. 2005 - 2012 காலப்பகுதியின் போது உள்நாட்டு நிதி ரூபா 32,170 மில்லியன் இத்துறைக்காக செலவிடப்பட்டுள்ளதுடன் மேலும் ரூபா 40,996 மில்லியன் 2013-2015 காலப்பகுதியில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்டுள்ளன. வியாபார மீள் கட்டமைப்பு மற்றும் தொகுதி விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இரண்டு விமான சேவைகளும் ஒன்றுடனொன்று இணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு, ஆசிய பசுபிக் பயணிகள் போக்குவரத்து என்பன இணைந்த வருமான வளர்ச்சி விகிதத்தினை அடைந்துள்ளதுடன் 6.7 சதவீதமாக

காணப்படுகின்றது. அதே வேளை ஆசிய பசுபிக் பிராந்தியமானது 2011 இல் 29 சதவீதத்திலிருந்து 2016 இல் உலக பயணிகளில் 33 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு இலங்கையின் சரக்குப் பொருளேற்றல் சந்தையினை 8.7 சதவீதமாக தரப்படுத்தியுள்ளதுடன் 2011 - 2016 காலப்பகுதியின் போது விரைவாக வளர்ந்து வரும் ஐந்து சர்வதேச விமானச் சந்தைகளில் முதலாவதாக தரப்படுத்தியுள்ளது. இந்த வகையில் விமானப் போக்குவரத்து துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் நடுத்தரக் காலத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது

2012 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியுடன் எரிபொருள் விலைகள் அதிகரித்ததனால் விமானச் சேவை கைத்தொழில் குறிப்பிடத்தக்களவு சவால்களை சந்தித்தது. இலங்கை விமானச்சேவை மற்றும் மிஹின்லங்கா என்பன குறிப்பாக இந்த சவால்களை எதிர்கொண்டதுடன் அதன் இலாப மட்டமும் இல்லாது போனதுடன் இலங்கைக்கான மதிப்பிடப்பட்ட வளர்ச்சியில் சுற்றுலா மையமொன்றாக முன்னுரிமைப்படுத்தல், பயணிகள் மற்றும் விமான சரக்குப் பொருள் தொழிற்பாடுகளில் திட்டமிட்ட வளர்ச்சி, இரண்டு விமான சேவைகளுக்குமான மீள் கட்டமைப்பு திட்டத்தின் நன்மை வளர்ந்துவரும் ஆசிய சந்தைகளில் உறுதியான இடத்தினை வழங்கியுள்ள அதே வேளை ஐரோப்பா மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கான வலையமைப்பு நெருக்கடிக்குள்ளாகியதுடன் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி இரண்டு சர்வதேச விமான நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விமானச் சேவைகள் கைத்தொழிலானது சுற்றுலா, ஏற்றுமதிகள், வர்த்தகம் மற்றும் விமானச் சேவை கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட சேவைகள் என்பற்றினூடாக பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் இத்தொழில் முயற்சிகளின் வர்த்தக இலாபத்தினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 2.7 நிர்மாணம்

அரச பொறியியல் கூட்டுத்தாபனம், நிர்மாண பொறியியல் ஆலோசனைப் பணியகம் மற்றும் அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று அரச தொழில்முயற்சிகள் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. நிர்மாணக் கைத்தொழில் ஏறக்குறைய 2011 ஐ விட 22 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் 2012 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதமாகவும் காணப்பட்டது. உலகளாவிய ரீதியில் நிர்மாணக் கைத்தொழில் வருடமொன்றிற்கு 10 சதவீதமாக வளர்ச்சியடைந்ததுடன் நிர்மாண தொழில் முயற்சிக்கான வாய்ப்புக்கள் அவற்றினது தொழிற்பாடுகளை உள்நாட்டிலும் அதே வேளை, உலகளாவிய ரீதியிலும் வளர்ந்து வரும் சந்தைகளில் அதிகரிக்கச் செய்தது. இந்த மூன்று தொழில் முயற்சிகளும் ரூபா 21.5 பில்லியன் பெறுமதியான அரசாங்க ஒப்பந்தங்களில் 90 சதவீதத்திற்கு அதிகமானவற்றில் ஈடுபட்டுள்ளன. எவ்வாறாயினும் நிர்மாணக் கைத்தொழிலின் புரள்வினை கவனத்திற்கொண்டு இந்த மூன்று தொழில்முயற்சிகளும் ஏறக்குறைய 0.7 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

இந்த மூன்று தொழில்முயற்சிகளுக்கும் 108 மில்லியன் ஐ. .அ. டொலர் பெறுமதியான நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றின் செயலாற்றுகை பல்வேறு காரணங்களினால் பாதிக்கப்பட்டுள்ளன. அரசாங்க முயற்சிகள் கொள்வனவு தாமதங்கள் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க ஒப்பந்தங்களிலும் ஈடுபட்டுள்ளதுடன் இந்தத் தொழில்முயற்சிகள் அவற்றினது கொள்ளளவினை விட மேலதிக வேலைகளில் ஈடுபட்டதனால் செலவுகளும் நேர விரயங்களும் அதிகரித்துள்ளன. மூன்று தொழில்முயற்சிகளும் எதிர்நோக்கும் திரவத்தன்மை நெருக்கடிகள் நவீன இயந்திர மற்றும் உபகரணங்களில் போதிய முதலீடுகள் காணப்படாததினால் இத்தொழில் முயற்சிகளின் கொள்ளளவு மற்றும் உற்பத்தித் திறனை பலவீனப்படுத்தியுள்ளது. அதேவேளை இம்மூன்று தொழில் முயற்சிகளும் திறன் படைத்த உயர் தொழில்புரிநர்களை சேர்த்துக் கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றன. உள்நாட்டு மற்றும் சர்வதேச நிர்மாணச் சந்தையில் விரிவாக்கல் காரணமாக உயர் தொழில்புரிநர்களுக்கான கேள்விகள் அதிகரித்துள்ளதுடன் அவர்களுக்கேற்ற உயர்ந்த சம்பளங்கள் அரச தொழில்முயற்சிகளினால் வழங்கமுடியாமற் போயின. இந்த மூன்று அரச நிர்மாண தொழில்முயற்சிகளினதும் முழுமையான ஆற்றல் அவற்றினது வியாபார மாதிரிகளை மீள் கட்டமைப்பு செய்துள்ளதுடன் தனியார்துறை நிர்மாணத்தில் ஈடுபாட்டினை அதிகரித்துள்ளதுடன் அரசாங்க முதலீட்டு கருத்திட்டங்களில் தனியார்துறையுடன் உப ஒப்பந்த ஏற்பாடுகளை செய்துள்ளதுடன் உயர் தொழில்புரிநர்கள் மற்றும் வர்த்தக ரீதியான நிறுவன முகாமைத்துவத்தினையும் கவரக் கூடிய வகையில் ஊக்குவிப்புகள் வழங்கப்பட வேண்டியுள்ளன.

## 2.8 அரச வங்கிகள்

8 அரச வங்கிகள் அவற்றினது தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்கு தொடர்ந்தும் முயன்று வருவதுடன் கிளை வலையமைப்புகள் 1,580 கிளைகள், 56 வங்கித் தொழில் நிலையங்கள் மற்றும் சேவை வழங்கல் மையங்கள் என்பன நாடு முழுவதிலும் திறக்கப்பட்டுள்ளன. 20 கிளைகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ளன. நாட்டில் நிதியியற் சேவைகளை வழங்குவதற்கான சிறந்த கிடைப்பனவுகள், அரச வங்கிகள் நாடு முழுவதிலும் ஏறக்குறைய 11 கிளைகளையும் 100,000 பேருக்கு 12 தன்னியக்க இயந்திரங்களையும் கொண்டிருந்ததுடன் இது 2005 இல் 3 கிளைகளாகவும் 100,000 பேருக்கு 1 தன்னியக்க இயந்திரமாகவும் காணப்பட்ட அதேவேளை 2005 இல் 1,000 சதுர கிலோமீற்றர்களுக்கு 0.5 இயந்திரமாகவும் 9 கிளைகளாகவும் காணப்பட்டதுடன் 2012 இல் 1,000 சதுர கிலோமீற்றர்களுக்கு 36 தன்னியக்க இயந்திரங்களும் 34 கிளைகளாகவும் வளர்ச்சியடைந்தது. பொருளாதாரத்தில் பிரதான போக்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் 37 விசேட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வங்கிக் கிளைகள் 2012 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக’கு ஏற்ப அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டின் போது அரச வங்கிகளின் வருமானம் 31 சதவீத வளர்ச்சியினைப் பதிவாக்கியதுடன் 22 சதவீத கைத்தொழில் வளர்ச்சியினை விஞ்சியதாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் குறித்த வருடத்தில் சராசரி வட்டி வீதங்கள் அதிகரித்து காணப்பட்டதுடன் 2011 இல் வரையறைகள் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.8 சதவீதமாகக் வீழ்ச்சியுற்றது. வங்கிகள் வைப்பாளர்களுக்கு அதிகூடிய வட்டி வழங்கிய காரணமாக அதன் கடன் வழங்குனர் திரட்டு நிதி காரணமாக 2011 இல் ரூபா 102.8 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 158.6 பில்லியனாக அதிகரித்ததுடன் வட்டிச் செலவினத்தில் 54 சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

8 அரசாங்க வங்கிகளும் மொத்த கைத்தொழிலின் ஆதனங்களில் 50 சதவீதத்தினைக் கொண்டிருந்ததுடன் 2012 இல் மொத்த வைப்புக்களில் 52 சதவீதமாகவும் காணப்பட்டது. அரச வங்கிகளின் மொத்த ஆதன அடிப்படை 2011 இல் 18 சதவீதத்திலிருந்து 2012 இல் 23 சதவீதமாக வளர்ச்சியடைந்ததுடன் இக்கைத்தொழிலின் சராசரி வளர்ச்சி 2012 இல் 20 சதவீதமாகக் காணப்பட்டதுடன் அரச தொழில்முயற்சிகளுக்கான கடன் வழங்கல் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாகும். இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பன மொத்த ஆதன அடிப்படையில் ரூபா 2,431 பில்லியனை 46 சதவீதமாக கொண்டிருந்தது. அரசாங்க வங்கிகளினால் பயன்படுத்தப்பட்டிருந்த மொத்த மூலதன நிதி 2012 இல் 123 பில்லியனாகக் காணப்பட்டதோடு, அது 2011 ஐ விட குறிப்பிடத்தக்க அளவில் 17.6 சதவீத வளர்ச்சியடைந்திருந்தது. வங்கித்தொழில் துறையின் மூலதன நிதி 2012 இல் 18 சதவீதமாக அதிகரித்தது.

.அரச வங்கிகளின் வைப்பு அடிப்படை 2012 இன் இறுதியில் ரூபா 1,888 பில்லியனாக அதிகரித்ததுடன் ஆண்டுக்காண்டு வளர்ச்சியினை 2012 இல் 16 சதவீதமாகப் பதிவாக்கியது. எவ்வாறாயினும் அரச வங்கிகளின் வைப்புக்களில் வளர்ச்சியானது 2012 இல் மொத்த வங்கித் தொழிலின் சராசரி 17 சதவீதத்தினைவிட குறைவாகக் காணப்பட்டது. கடன் வளர்ச்சி, முற்பணங்கள் என்பவற்றின் மீதான வரையறைகள் காணப்பட்டபோதிலும் மொத்த வங்கித் தொழில் வளர்ச்சி வீதம் 21 சதவீதத்திற்கெதிராக 2012 இல் 25.8 சதவீதத்தினை பதிவாக்கியது.

உயர்ந்த வட்டி வீதம் 2012 இல் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் வங்கித் தொழிற்பாடுகளுக்கு சவாலாகவும் காணப்பட்டது. அரச வங்கிகளின் மொத்த செயலாற்றுகையல்லாத கடன்கள் ரூபா 55.3 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 28 சதவீத அல்லது ரூபா 12.2 பில்லியன் அதிகரிப்பாகும். செயலாற்றுகையல்லாத கடன் விகிதம் 2011 இல் 4.0 சதவீதத்திலிருந்து 2012 இல் 4.1 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன் 2012 இல் செயலாற்றுகையல்லாத கடன் விகித சராசரி மொத்த வங்கித் தொழிலில் 3.6 சதவீதமாகக் காணப்பட்டது.

மூன்று வருட கூட்டு ஒப்பந்தங்கள் 2012 - 2014 களில் அரசாங்க வங்கிகளை 23 சதவீத

தனிப்பட்ட செலவினமாக அல்லது ரூபா 6.5 பில்லியனிலிருந்து ரூபா 34.4 பில்லியனாக 2012இல் அதிகரித்தது. அரச தொழில்முயற்சிகள் சம்பாத்தியத்திற்கான கடன் வழங்கல் மீதான நம்பிக்கையில் இதையொத்த ஆபத்துக்கள் காணப்பட்டன. அடகுச்சேவை 460 பில்லியனாகக் காணப்பட்டதுடன் மொத்த கடனில் 29 சதவீதமாக காணப்பட்டமை சராசரி சர்வதேச தங்க விலைகளில் 36 சதவீத வீழ்ச்சியுடன் வங்கிகளை முகாமை செய்ய முடியாமற் செய்ததுடன் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பெறுமதியினையும் கொண்டிருந்தது. ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வீடமைப்பு மற்றும் வர்த்தக முயற்சிகள் இவற்றின் வியாபார திட்டமிடல் மற்றும் கண்காணிப்பிற்கு அவசியமாகக் காணப்படுகின்றது.

## 2.9 காப்புறுதி

காப்புறுதித்துறை நாட்டில் இலங்கைக் காப்புறுதி சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 22 காப்புறுதியாளர்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் 16 உள்நாட்டு கம்பனிகளும் 6 வெளிநாட்டு கம்பனிகளும் காணப்படுகின்றன. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசியக் காப்புறுதி நம்பிக்கை நிதியம், விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச்சபை, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன இத்துறையில் அரசாங்கத்தின் பங்களிப்பினை வழங்குகின்றன.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சந்தைப் பங்கில் பொதுக்காப்புறுதியில் 24 சதவீதத்தினைக் கொண்டிருப்பதுடன் வாழ்க்கைக் காப்புறுதி வியாபாரத்தில் 2012 இல் 19 சதவீதமாகக் காணப்படுவதுடன் காப்புறுதிச் சந்தையில் முக்கியமான பங்கினையும் வகிக்கின்றது. தேசியக் காப்புறுதி நம்பிக்கை நிதியம் மீள் காப்புறுதியினை பொதுவாக மேற்கொள்வதுடன் அக்ரஹார காப்புறுதித் திட்டமான அரசாங்க ஊழியர்களின் காப்புறுதியினை முகாமை செய்கின்றது. இலங்கைக் காப்புறுதிக் கைத்தொழில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியினை பொதுவாக காப்புறுதி வியாபாரத்தில் கொண்டிருப்பதுடன் மொத்த எழுத்துமூல காப்புறுதி 2009 இல் ரூபா 35,101 மில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 53,297 மில்லியனாக அதிகரித்தது. இ.கா.கூட்டுத்தாபனம், தே.கா.ந.நிதியம் என்பன 2009 இலிருந்து 27.6 சதவீத உயர்ந்த வளர்ச்சியினை பதிவாக்கியுள்ளதுடன் இலங்கை ஏற்றுமதி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மொத்தப் புரள்வு ரூபா 174 மில்லியனை சிறிய அளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு காப்புறுதியாக வழங்குகின்றது.

அரசாங்கப் பிணையங்கள் காப்புறுதிக் கைத்தொழிலில் மிக முக்கியமான முதலீட்டுச் சாதனமாக காணப்படுவதுடன் முதலீட்டுத் துறையில் ரூபா 30 பில்லியனை முதலீட்டுள்ளதுடன் இது அரசாங்கத்தின் பிணையங்களில் மொத்த முதலீட்டில் 38.4 சதவீதமாகும். தேசியக் காப்புறுதி நம்பிக்கை நிதியம் ரூபா 4.3 பில்லியனை அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்துள்ளது. அரசாங்கத்துறை ஊழியர்கள் 1.0 மில்லியனை கொண்டுள்ளதுடன் மொத்த ஊழியப் படையில் இது 8.5 மில்லியன் எவ்வித பங்களிப்புமற்ற ஓய்வூதியத்தினைப் பெறுவதுடன் அக்ரஹார

காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ திட்டங்கள் என்பனவும் வழங்கப்படுகின்றன. இலவச சுகாதார சேவைகள் தொடர்ந்து காணப்படினும் அரசாங்கம் நலன்புரி திட்டங்களையும் குறைந்த ஆயுட் காப்புறுதியினையும் நடைமுறைப்படுத்துகின்றது. இதற்காக நடுத்தரக் காலத்தில் குறிப்பிடத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பேரண்டப் பொருளாதார கொள்கையானது வருமான வளர்ச்சியில் அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளதுடன் மோட்டார் வாகனங்கள், தீ மற்றும் ஏனைய வடிவங்களிலான காப்புறுதிகளில் வளர்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்கின்றன.

## 2.10 லொத்தர்கள்

தேசிய லொத்தர்கள் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர்கள் சபை என்பன சந்தைக்கு உடனடியான லொத்தர்களை வழங்கும் நிறுவனங்களாகும். தேசிய லொத்தர் சபையின் உற்பத்தித் துறையானது 2012 இன் இறுதியில் 7 மறைமுக லொத்தர்களும் 2 நேரடி லொத்தர்களையும் கொண்டிருந்ததுடன், அபிவிருத்தி லொத்தர் சபை மொத்தமாக 6 மறைமுக மற்றும் 3 நேரடி லொத்தர்களைக் கொண்டிருந்தது. 2012 இன் இறுதியில் லொத்தர் சபைகளின் சந்தைப் பங்கு 25 சதவீதமாகக் காணப்பட்டதுடன் அபிவிருத்தி லொத்தர் சபையின் பங்குகள் எஞ்சிய 45 சதவீதமாகக் காணப்பட்டது. இந்த நிறுவனங்கள் ஒன்றோடொன்று விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரசாரங்களில் வேகத்துடன் செயற்பட்டு வருகின்றன. 2012 இல் லொத்தர்கள் சபையும் அபிவிருத்தி லொத்தர்கள் சபையும் விளம்பரங்கள் மற்றும் சந்தைப்படுத்தலுக்காக ரூபா 1,112 மில்லியனை செலவிட்டுள்ளதுடன் இது 2011 உடன் ஒப்பிடுகையில் ரூபா 290 ஆக அல்லது 35 சதவீதமாக அதிகரித்துள்ளது. விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் கணக்கு அவற்றின் மொத்தச் செலவினத்தில் 55 சதவீதமாகும்.

இக்கைத்தொழில் துறையின் மொத்த ஆதனம் 2011 இல் ரூபா 4,578 மில்லியனிலிருந்து 5 சதவீத வளர்ச்சியினை அதாவது ரூபா 4,813 மில்லியனை 2012இல் பதிவாக்கியுள்ளது. இக்கைத்தொழிலின் மொத்த வருமானம் 2011 உடன் ஒப்பிடுகையில் 2012 இன் ரூபா 3,820 மில்லியனிலிருந்து ரூபா 20,452 மில்லியனாக அல்லது 23 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பன 916 மில்லியன் டிக்கட்டுகளை விற்பனை செய்துள்ளதுடன் வெளிப்படுத்தப்பட்ட பரிசுத் தொகை வழங்கல் ரூபா 10,682 மில்லியனாகும். இது 2011 இல் 8,978 மில்லியனாகக் காணப்பட்டது. 2012 இல் தேசிய லொத்தர் சபை ரூபா 2,276 மில்லியனை திரட்டு நிதியத்திற்கு சேர்த்துள்ளதுடன் இது 2011 இனைவிட 69 சதவீத அதிகரிப்பாகும். அபிவிருத்தி லொத்தர் அதனது பங்களிப்பினை சனாதிபதி நிதியத்திற்கு 18 சதவீதமாக வழங்குவதுடன் ரூபா 253 மில்லியனிலிருந்து ரூபா 1,648 ஆக அதிகரித்துள்ளது. தலைக்குரிய வருமானம் மேலும் அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இந்த லொத்தர் சபைகள் அவற்றினது உற்பத்திகளை வருமான மாற்றம் மற்றும் சனத்தொகை மாற்றத்திற்கேற்ப மாற்றியமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இணையத்தளம், குறுஞ் செய்திகள் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் இவற்றினை சந்தையில் மிக வினைத்திறனாக உட்புகுவதற்கு வசதியளிக்கின்றது.

2.11 கால்நடை

வருடமொன்றிற்கு ஏறக்குறைய 400 மில்லியன் இறக்குமதிகளை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்காக கால்நடை செயற்பாடுகளில் ஊக்குவிப்பினை மேற்கொள்ளும் வகையில் அரசாங்கம் கால்நடை செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அண்மைக் காலங்களில் கால்நடைக் கைத்தொழிலில் சந்தை மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. மில்கோ, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை ஆகிய இரண்டு தொழில்முயற்சிகளும் இத்துறையில் பால் உற்பத்தியினை 15 மில்லியன் லீற்றர்களிலிருந்து 72 மில்லியன் லீற்றர்களாக அதிகரிக்கச் செய்துள்ளது.

சில பல்தேசியக் கம்பனிகள் உள்ளடங்கலான தனியார்துறை பால்மா இறக்குமதியில் ஈடுபட்டுள்ளதுடன் மூன்று முக்கிய கம்பனிகளை உள்ளடக்கிய உள்நாட்டு தொழில்முயற்சிகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் சிறிய பாற்பண்ணையாளர்கள் ஏறக்குறைய 400,000 பேரினை இத்துறையில் ஈடுபடுத்தியுள்ளது. 2012 இன் போது பால் உற்பத்தியில் தன்னிறைவினை அடையும் கொள்கைக்கேற்ப, அரசாங்கம் நடுத்தரக் காலத்தில் ரூபா 624 மில்லியன் செலவில் 2,000 பசுக்களை இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளதுடன் பால் உற்பத்தியானது அதிகரிப்பதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கிடையில் பாற்பண்ணைக் கைத்தொழில் ஊக்குவிக்கப்படுவதுடன் அதிகரித்த உற்பத்தி மற்றும் பால் தொடர்பான பொருட்களும் ஊக்குவிக்கப்படுகின்றன. கால்நடை அபிவிருத்திச் சபை மற்றும் மில்கோ என்பன தொடர்ந்து பாற்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டு வருவதுடன் ஒன்றுக்கொன்று போட்டித்தன்மையுடனும் தொழிற்படுகின்றன. பாற்பண்ணைத் தொழில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களினால் செல்வாக்கு செலுத்தப்படுவதுடன் போஷாக்கின்மை மற்றும் செலவு விரயம் போன்ற பிரச்சினைகளை நீக்குவதுடன் தொழிற்துறையினை மேம்படுத்துவதற்கான அறிவு மாற்றத்தினை அதிகரித்தல் என்பன களஞ்சிய வசதிகள், சந்தைத் தொடர்புகள் போன்றவற்றினால் நட்டமடைவதுடன் கால்நடை அபிவிருத்தி சபை தேவையான வளங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இது கால்நடை அபிவிருத்திச் சபையினதும் மில்கோவினதும் விரிவாக்கலை போட்டிச் சந்தை சூழலில் மேலும் விரிவாக்குகின்றது.

## 2.12 பெருந்தோட்டத்துறை

பெருந்தோட்டத்துறையில் அரசாங்க தொழிற்பாடு 2004 இல் தனியார் மயப்படுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள தொழில்முயற்சிகளான மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், சிலாபம், குருநாகல், எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலைகள் என்பவற்றில் காணப்படுகின்றது.

மக்கள் தோட்ட, அரச பெருந்தோட்ட மற்றும் எல்கடுவ கம்பனிகளின் பயிர்ச்செய்கை ஏக்கர்கள் முறையே 11,695 ஹெக், 11,757 ஹெக் மற்றும் 4,083 ஹெக் ஆக காணப்படுவதுடன் தேயிலை மற்றும் இறப்பர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றன. தெங்கு அபிவிருத்திச் சபை, தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் குருநாகல், சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிகள் தெங்கு மற்றும் சிறு தானிய பயிர்கள் என்பன 9,303 ஹெக்டேயர்களில் பயிரிடப்பட்டுள்ளன.

2012 இல் தேயிலை உற்பத்தி, மக்கள் தோட்ட சபை, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், எல்கடுவ மற்றும் களுபோவிட்டியான என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டதுடன் 8.6 மில்லியன் கி.கிராம் உற்பத்தி செய்யப்பட்டதுடன் இது 2011 இனைவிட 3.5 சதவீத அதிகரிப்பாகும். நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் இது 2.5 சதவீதமாகும்.

இந்த கம்பனிகளினால் கொள்ளப்பட்ட மொத்த காணிகளில் 11.5 சதவீதமானவை நாட்டின் தேயிலை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றன. ஹெக்டேயர் ஒன்றிற்கு 337 கிலோ கிராம்களை கொண்டுள்ளதுடன் 76 சதவீதத்திற்கு குறைவான சராசரி உற்பத்தியினையும் 1,400 கி.கிராம் உற்பத்தி இத்தொழில்முயற்சிகளினால் குறைவாக பயன்படுத்துகின்ற கொள்ளளவாக காணப்படுகின்றது, மக்கள் தோட்டச் சபை, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் குருநாகல் பெருந்தோட்டம் என்பன 450,000 கி.கிராம் இறப்பரினை உற்பத்தி செய்ததுடன் இது 2011 இனைவிட 15 சதவீத வீழ்ச்சியாகும். மொத்த இறப்பர் உற்பத்தியில் 0.3 சதவீதத்தினை மாத்திரம் கொண்டுள்ளது.

இக்கம்பனிகளினால் கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு 0.74 சதவீதம் இறப்பர் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகிறது. ஹெக்டேயர் ஒன்றிற்கு 463 கி.கிராம் விளைச்சலைக் கொண்ட இக்கம்பனிகள் நாட்டின் சராசரி அறுவடை ஹெக்டேயர் ஒன்றிற்கு 1,607 கி.கிராமிலும் பார்க்க 71 சதவீதம் குறைவானது என்ற வகையில் இத்தொழில்முயற்சிகள் முழுமையாக மீள் கட்டமைப்பு செய்யப்பட வேண்டியுள்ளன.

சிலாபம் மற்றும் குருநாகல் பெருந்தோட்டங்கள், தெங்குப் பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் என்பன 9,303 ஹெக்டேயர் காணியினை அல்லது 2.3 சதவீதத்தினை மொத்த தெங்கு உற்பத்தி நிலத்தினை முகாமை செய்வதுடன் தெங்கு உற்பத்தி 44.7 மில்லியன் தேங்காய்களாக அதிகரித்துள்ளது. இது 2011 இனைவிட 6.7 சதவீத அதிகரிப்பாகும். அதே வேளை, மொத்த தெங்கு உற்பத்தியில் 1.5 சதவீதமாகும். இத்தகைய அரச தொழில்முயற்சிகள்

உற்பத்தித் திறனின் பின்னால் இருப்பதுடன் நாட்டில் முழு கைத்தொழிலையும் உள்ளடக்கியுள்ளன. காணிப் பயன்பாடு, மீள் நடுகை, பசளைப் பிரயோகம், புதிய இயந்திரம் மற்றும் தொழினுட்பம் என்பவற்றில் முதலீடுகள் போதியதாக காணப்படாமை, முக்கிய பதவியணியின்மை, உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் நடைமுறைகளை பின்பற்றாமை, உட்கட்டமைப்பு மற்றும் நிறுவனத்துறையினை மேம்படுத்த வேண்டியுள்ளது. நிலையான தினக் கூலி கட்டமைப்பு பெருந்தோட்டத்துறையில் காணப்படுவதுடன் உற்பத்தித் திறன் கூலிக் கட்டமைப்பு இவற்றின் செலவினத்தில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது குறைந்த அறுவடையினையும் வழங்கியுள்ளதுடன் இவற்றினால் உரப்பட்ட மொத்த நட்டங்களையும் பிரதிபலித்துள்ளது. அரச உடமை பெருந்தோட்டங்கள் சம்பள செலவினத்தினை ஏற்படுத்தியதுடன் உற்பத்தித் திறன் காணப்படாமை மற்றும் முறையற்றமீள் நடுகை, தொழில்நுட்பம் பயன்படுத்தாமை மற்றும் முகாமைத்துவ திறனின்மை என்பனவும் காணப்படுகின்றன. இத்தொழில்முயற்சிகளில் நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் கூட உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் எல்கடுவ பெருந்தோட்டம் என்பன பயிர்ச்செய்கைக்கு உதவாததுடன் நீண்ட காலமாக கைவிடப்பட்டு தேவையான முதலீடுகள் காணப்படாததனால் குறிப்பிடத்தக்க மூலதன உள்ளீடுகளும் காணப்படவில்லை. நடுத்தரக் காலத்தில் ஆகக் குறைந்தது ரூபா 2 பில்லியனாவது முதலீடு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் சொந்த நிதி காணப்படாமையினால் பலவீனமான ஐந்தொகையினை மீள் கட்டமைப்பு செய்வதற்கு உரிய சுதந்திரம் காணப்படவில்லையென்பதுடன் இவை மீள் நடுகை, உரப் பாவனை என்பவற்றின் மூலம் அவற்றினது உற்பத்தித் திறனை மேம்படுத்துவது கடினமாகவுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட இலங்கை சீனிக் கம்பனி சீனி பெருந்தோட்டத்தினையும் அதனோடு தொடர்பான கைத்தொழில்களையும் எழுச்சி பெறச் செய்வதற்கு அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டள்ளதுடன் 12,000 சிறிய விவசாயிகளை உள்ளடக்கும் வகையில் அதன் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம் விரிவாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் 2012 இலிருந்து முழுமையாக வர்த்தகக் கம்பனிகளாக காணப்படுகின்றன. கம்பனி கந்தளாய் மற்றும் ஹிங்குறான சீனி பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் அதன் வியாபார தொழிற்பாடுகளை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் செயன்முறை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.13 சுகாதாரம்

அரச மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்க மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் இரண்டும் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு சிறந்த மருந்துப் பொருட்களை வழங்குவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு அரச தொழில் முயற்சிகளாகும். மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கொள்வனவு முகவராக தொழிற்படுவதுடன் மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 60 வகையான மருந்துப் பொருட்களை தயாரிக்கின்றது. இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், ஆயுர்வே மருந்துப் பொருட்கள்

மற்றும் சேவைகளை வழங்குவதிலும் ஈடுபட்டு வருகின்றது. ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை அரசாங்கத்தின் ஒரேயொரு கட்டணம் அறவிடும் வைத்தியசாலை என்பதுடன் நாட்டில் சிகிச்சை மற்றும் சிகிச்சை சார்ந்த சேவைகளை வழங்கும் வைத்தியசாலையாகக் காணப்படுகின்றது. இவ்வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள் மற்றும் தாதிமாருக்கான பயிற்சியினையும் வழங்குகின்றது.

### 2.14 ஊடகம்

இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு என்பன இத்துறையில் முக்கிய பங்கினை ஆற்றி வருகின்றன. நாட்டின் சந்தை பங்கு 32 சதவீதமாகக் காணப்படுகின்றது. நாட்டில் அனைத்து சமூகங்களுக்கும் அரச ஊடகத்தினை கிடைக்கப் பெறச் செய்யும் அரசாங்கத்தின் கொள்கைக்கமைவாக 18 தனியார் தொலைக்காட்சிகளுடனும் 39 வானொலி நிலையங்களுடனும் போட்டியிட்டு அதனது புதிய அலைவரிசைகளை மூன்று மொழிகளிலும் விரிவாக்குவதன் மூலம் சேவையினை வழங்குகின்றன. ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி என்பன அவற்றினது புதிய வருமான வழிகளை பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமை செய்கின்றன. எவ்வாறாயினும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் தேசிய வரவு செலவுத் திட்டத்தினால் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியில் உறுதியான நிதியியல் நிலைமையினைக் கொண்ட இரண்டு தொலைக்காட்சி நிலையங்களும் அவற்றின் முதலீடுகளில் உபகரணம் மற்றும் வசதிகளை அடுத்த மூன்று வருடங்களில் அதிகரிக்க உள்ளன. கடந்த ஆண்டில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சிறந்த தெளிவுடனும் நாட்டில் எப்பகுதியிலிருந்தும் செவிமடுக்கும் வகையில் எவ்எம் வானொலி அலைவரிசைகளை மீள மாற்றியமைத்தது.

### 2.15 சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்

சில அரச தொழில் முயற்சிகள் விற்பனைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றுள் லக்சதொச மிக முக்கிய பங்கினை வகிப்பதுடன் தாங்கிக் கொள்ள முடியுமான விலைகளில் ஒழுங்குபடுத்தல் வழங்கல்களை உறுதிப்படுத்தும் வகையில் சந்தைக் கேள்வியினை தொடர்ந்தும் பேணி வருகின்றன. அதிகரித்து வரும் சுற்றுலா சனத்தொகைக் கேற்ப நாட்டின் கைப்பணிப்பொருள் கைத்தொழிலும் அதிகரித்து வருவதுடன் உள்நாட்டுக் கைப்பணிக் கைத்தொழிலானது பாதுகாப்பான சந்தை ஏற்பாட்டுடன் விரிவாக்கப்பட்டது. சந்தைப் போக்கில் தாக்கத்தைச் செலுத்தக் கூடிய தொழில் முயற்சிகள் உறுதியான சந்தைப் பங்களிப்பினைக் கொண்டுள்ளதுடன் அவற்றின் இலாபம் மற்றும் நலன்புரிச்சேவைகள் அதேபோன்று உற்பத்தியாளர் சேவைகளும் அதிகரித்துள்ளன. உள்நாட்டு உற்பத்தி வழங்களில் நெருங்கிய தொடர்புகள் பெறுமதி சேர்ப்பு மற்றும் ஒத்துழைப்பு மேம்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது. இவை இறக்குமதிகளின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனம் மீனவர்களின் உட்கட்டமைப்பு வசதிகளில் ஈடுபட்டுள்ளதுடன் இதற்காக 4,000 கப்பல்களும்

பயன்படுத்தப்பட்டுள்ளன. மீன் கொள்வனவு மற்றும் வழங்களில் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளதுடன் நியாயமான விலையில் அவற்றை வழங்குவதற்கும் முயற்சிக்கின்றது. அரச அச்சகக் கூட்டுத்தாபனம் பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடுவதில் ஈடுபட்டுள்ளதுடன் தனியார் துறை போட்டித் தன்மைக்கு மத்தியில் சந்தையின் 25 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

விவசாயத்துறை பின்னணியில் அரசாங்கத்தின் கொள்கைக்கமைவாக இலங்கை உரக் கூட்டுத்தாபனம், கொழும்பு உரக் கொம்பனி என்பன சிறிய விவசாயிகளுக்கு உரத்தினை வழங்கி வருகின்றன. நாட்டில் உர இறக்குமதி ரூபா 39,859 மில்லியனாகக் காணப்படுகின்றது. 2011 இல் வரட்சி மற்றும் இருப்பு அதிகரித்தமை காரணமாக 801,000 மெ.தொ. களிலிருந்து 2012 இல் 640,000 மெ.தொ.களாக மொத்த இறக்குமதி வீழ்ச்சியடைந்தது. 2012 இன்போது இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு உரக் கம்பனி என்பன 79 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 2012 இல் மொத்த இறக்குமதிகள் 505,000 மெ.தொ. களாகக் காணப்பட்டதுடன் மீதி 409,000 மெ.தொ கள் தனியார் துறையினால் இறக்குமதி செய்யப்பட்டன. 2012 இல் அரச தொழில் முயற்சிகளின் இறக்குமதிகள் 29 சதவீதத்தினால் அல்லது 113,000 மெ.தொ. ஆகவும் அதிகரித்ததுடன் 2012 இல் 135,000 மெ. தொ. ஆகக் காணப்பட்ட அதேவேளை தனியார் துறையின் இறக்குமதிகள் 2011 இல் 409,000 மெ. தொ இலிருந்து 67 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

### 2.16 புதுப்பிக்க முடியாத வளங்கள்

அரச தொழில் முயற்சிகள் புதுப்பிக்க முடியாத மூலங்கள் துறையில் நாட்டில் வியாபாரத்தினைக் கொண்டிருக்கும் தொழில் முயற்சிகள் தனியார் மயப்படுத்தாமை என்றகொள்கையின் அடிப்படையில் பாதுகாக்கப்பட்டுள்ளன. யுத்தத்தனால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டதுடன் கனிய வளங்களுக்கான சர்வதேசக் கேள்வி மற்றும் மூலப்பொருட்களுக்கான பெறுமதி சேர்ப்பு அதிகரிக்கப்பட்டமை காரணமாக கனிய வளங்கள் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்ற மூன்று தொழில் முயற்சிகள் குறிப்பிடப்பட்ட வியாபாரத்தினைக் கொண்டிருந்த போதும் நாட்டின் அபிவிருத்திக்கு உபாயமுறைப் பங்களிப்பினை வழங்குகின்றது. அத்துடன் கிறபைற் தயாரிப்பு செயற்பாடுகளில் அதன் தொழிற்பாட்டு அளவு அதிகரிக்கப்படாதுள்ளது.

## 2.17 அரச உடமை தொழில்முயற்சிகளின் இலாபத்தன்மை

ரூபா மில்லியன்

| | தொழில்முயற்சி | இலாபம்/(நட்டம்) 2005 | 2011 | 2012 | வியாபாரப் புரள்வு-2012 | வரவு செலவுத் திட்ட ஒத்துழைப்பு - 2012 மீண்டெழும் | மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 3,120 | 16,485 | 19,794 | 110,138 | - | - |
| 2 | மக்கள் வங்கி | 4,035 | 15,600 | 15,249 | 94,633 | - | - |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 3,457 | 9,255 | 6,189 | 53,483 | - | - |
| 4 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 415 | 689 | 436 | 3,012 | - | - |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் | 162 | 321 | 73 | 2,689 | - | - |
| 6 | லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி * | - | 124 | 232 | 588 | - | - |
| 7 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 658 | 1,875 | 1,492 | 9,645 | - | - |
| 8 | வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி * | - | 494 | 594 | 885 | - | - |
| 9 | ஊழியர் நம்பிக்கை நிதிய சபை | | 10,950 | 12,446 | 12,920 | - | - |
| 10 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 1,215 | 2,132 | 2,905 | 25,286 | - | - |
| 11 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் * | - | 2,315 | 2,107 | 2,262 | - | - |
| 12 | இலங்கை மின்சார சபை | (6,852) | (19,266) | (61,163) | 170,652 | - | - |
| 13 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 9,839 | (94,508) | (89,658) | 515,704 | - | - |
| 14 | துறைமுக அதிகார சபை | 13,239 | 329 | 5,303 | 37,343 | - | - |
| 15 | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | (22) | 421 | (579) | 16,294 | - | 29,590 |
| 16 | விமான நிலையம் விமானசேவைகள் இலங்கை லிமிட்டெட் | 670 | 3,421 | 4,826 | 11,431 | - | - |
| 17 | வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் | 834 | (28,526) | (29,972) | 117,186 | - | 14,286 |
| 18 | மிஹின் லங்கா பிரைவேட் லிமிட்டெட் ** | - | (1,967) | (2,866) | 7,452 | - | 507 |
| 19 | இலங்கை போக்குவரத்து சபை | (1,119) | (3,690) | (4,653) | 20,165 | 5,516 | 579 |
| 20 | அரச பொறியியற் கூட்டுத்தாபனம் | (42) | 211 | 247 | 8,407 | - | - |
| 21 | மத்திய பொறியியல் மதியுரை பணியகம் | 45 | 427 | 471 | 9,604 | - | - |
| 22 | அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 21 | 43 | 73 | 3,570 | - | - |
| 23 | மில்கோ பிரைவேட் லிமிட்டெட் | 85 | 111 | (215) | 5,430 | - | 37 |
| 24 | தேசிய கால்நடை அபிவிருத்தி சபை | (12) | 250 | 28 | 1,219 | - | - |
| 25 | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | (34) | (69) | (42) | 2,133 | - | - |
| 26 | இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் | (66) | (302) | (277) | 442 | 109 | 96 |
| 27 | அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | 15 | 245 | 116 | 1,414 | - | - |
| 28 | இலங்கை ஆயுர்வேத மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | 6 | 63 | 54 | 415 | - | - |
| 29 | அரச மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | 431 | 418 | 468 | 20,215 | - | - |
| 30 | ஸ்ரீ ஜெயவர்தனபுர பொது வைத்தியசாலை | (185) | (28) | (121) | 1,855 | 843 | 71 |
| 31 | வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | 39 | 678 | 739 | 2,378 | - | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 32 | இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம் | 228 | 173 | 52 | 2,026 | - | 67 |
| 33 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | (98) | (78) | (54) | 1,051 | 134 | 65 |
| 34 | சிலோன்/வோ்ட்டிலைசா் கம்பனி லிமிட்டெட் | 48 | 144 | 102 | 2,849 | - | - |
| 35 | கொழும்பு கொமா்ஷல்/வோ்ட்டிலைசா் கம்பனி லிமிட்டெட் | 10 | 161 | 403 | 1,224 | - | - |
| 36 | அரச மரக்கூட்டுத்தானம் | 408 | 603 | 828 | 3,562 | - | - |
| 37 | இலங்கை அரச வா்த்தக (பொது) கோப்பரேஷன் லிமிட்டெட | (112) | 62 | 105 | 2,379 | 400 | - |
| 38 | ஹோட்டல் டிவலப்பா்ஸ் லங்கா பிஎல்சி | (37) | 48 | (7) | 727 | - | - |
| 39 | கூட்டுறவு மொத்தவிற்பனைத் தாபனம் | (165) | 2 | 43 | 416 | - | - |
| 40 | லங்கா சதொச லிமிட்டெட் | (4) | 79 | 47 | 20,661 | - | - |
| 41 | அபிவிருத்தி லொத்தா் சபை | 1,218 | 1,901 | 2,193 | 8,240 | - | - |
| 42 | தேசிய லொத்தா் சபை | 269 | 396 | 566 | 12,212 | - | - |
| 43 | லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டெட் | 420 | 1,107 | 1,373 | 2,229 | - | - |
| 44 | லங்கா பொஸ்பேட் லிமிட்டெட் | 39 | 202 | 113 | 449 | - | - |
| 45 | அரச அச்சகக் கூட்டுத்தானம் | 21 | 134 | 141 | 1,235 | - | - |
| 46 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 86 | 113 | 163 | 287 | - | - |
| 47 | விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபை | (98) | (3,692) | (4,841) | 400 | 135 | - |
| 48 | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | (84) | (52) | (119) | 575 | - | - |
| 49 | குருணாகல் பிளான்டேஷன் லிமிட்டெட் | 20 | 225 | 186 | 550 | - | - |
| 50 | சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட் | 55 | 97 | 86 | 473 | - | - |
| 51 | களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிட்டெட் | 25 | 31 | 91 | 637 | - | - |
| 52 | ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை | (135) | (258) | (252) | 926 | - | - |
| 53 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | (1) | 20 | 44 | 150 | 59 | 28 |
| 54 | இலங்கை கைப்பணிச் சபை (லக்சல) | 1 | 50 | 73 | 511 | - | - |
| 55. | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டெட் | 4 | 54 | 58 | 157 | - | - |

*மூலம்: அரச உடமை தொழில் முயற்சிகள், அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்*

**2006 இல் தாபிக்கப்பட்டது*

***2007 இல் தாபிக்கப்பட்டது*

## 2.18 மீள்கட்டமைப்புக்குட்பட்ட தொழில்முயற்சிகள்

| தொழில் முயற்சி | முக்கிய செயற்பாடுகள் | செயலாற்றுகை/ பிரச்சினைகள் | 2012 இல் மொத்த செலவினம் ரூ.மில் | 2012 இல் மொத்த வருமானம் ரூ.மில் |
|---|---|---|---|---|
| லங்கா சலுசல லிமிட்டெட் | வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை | சுற்றுலாத் துறையினை குறிக்கோளாகக் கொண்டு உள்ளூர் கைப்பணிப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான திட்டத்தினை மீள்கட்டமைத்தல் | 217 | 194 |
| கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் | தற்பொழுது அரிசி ஆலை அபிவிருத்தி, பண்ணைப் பொருட்கள் விற்பனை, சரக்கு கப்பல் சேவைகள் மற்றும் பொதியிடல் சேவைகளில் ஈடுபடுகின்றது | வியாபார வருமானம் 41 சதவீதத்தினால் அதிகரித்தாலும் கூட, கூ.மொ.தா. அதிகரித்த செலவினங்கள் காரணமாக 2012 இல் ரூ 246 மில்லியன் நட்டத்தினை எதிர்கொண்டது. கூ.மொ.தா.விற்கு 2016இல் 4.4பில்லியன் தாபன முறிகளை தீர்க்க வேண்டியிருக்கின்றது. | 373 | 127 |
| அரச வர்த்தக (கூட்டுறவு மொத்த) கம்பனி லிமிட்டெட் | வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. | வரிசை அமைச்சானது மீள்கட்டமைப்பு செயற்பாட்டினை ஆரம்பித்துள்ளது | - | - |
| ஜனதா / வேர்ட்டிலைசர்ஸ் என்ரபிரைசஸ் லிமிட்டெட் | தீர்த்துக்கட்டல் செயன்முறையின் கீழ் உள்ளது | 2012.07.18 அன்று ஜ.வே.எ.லி மற்றும் அதன் அனைத்து களஞ்சியசாலைகளையும் கொழும்பு மாநகர சபைக்குள் இடமாற்றுவதற்கான அங்கீகாரத்தினை அமைச்சரவை வழங்கியது . | 253 | 30 |
| இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் | வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. | இதன் இரண்டு தொழிற்சாலைகள் முதலீட்டாளர்களுக்கு 30 வருட குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொழிற்சாலையைக் குத்தகைக்கு விடுவதற்குப் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை தேடும் நடவடிக்கையில் நிரல் அமைச்சு ஈடுபட்டு வருகின்றது. | - | - |
| இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் | ஓடுகள், / புளோர் ரைல்கள் என்பனவற்றை உற்பத்தி செய்தல். | ரணவிரு செய விற்கு செங்கற்களை உற்பத்தி செய்வதற்காக இடவசதி ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக அதன் உற்பத்தியானது அதிகரித்துள்ளதோடு, 2012 ஆம் ஆண்டில் அதன் மூலம் கிடைக்கப் பெற்ற இலாபம் ரூபா 6 மில்லியன்களாகும். | 104 | 110 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஹிங்குராண சீனிக் கைத்தொழிற்சாலை | தீர்த்துக்கட்டல் செயன்முறையின் கீழ் உள்ளது. | அரச வளங்கள் மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இருந்த ஹி.சீ.கை. ஆனது புதிதாக தாபிக்கப்பட்ட சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிற்கு மாற்றப்பட்டது. | 11 | 12 |
| கந்தளாய் சீனித் தொழிற்சாலை . | புதிய மீள்கட்டமைப்பு நடவடிக்கை காரணமாக 1993 முதல் இதன் செயற்பாடுகள் இடைநிறுத்தப் பட்டன | அரச வளங்கள் மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இருந்த க.சீ.தொ. ஆனது புதிதாக தாபிக்கப்பட்ட சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிற்கு மாற்றப்பட்டது. | 15 | - |
| லங்கா /பெப்ரிக் லிமிட்டெட் | தீர்த்துக் கட்டல் செயன்முறையின் கீழ் உள்ளது | அமைச்சரவையின் தீர்மானத்திற்கேற்ப ஒழித்துக் கட்டுனர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் . | - | - |
| பி.சி.சி. லங்கா லிமிட்டெட் தேங்காய் எண்ணெய் மற்றும் சவர்க்காரம் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்தல். | தேங்காய் எண்ணெய் மற்றும் சவர்க்காரத்துடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பு | இதன் 35வீத மொத்த வருமானமானது அதன் சொத்தின் வாடகை வருமானத்திலிருந்து கிடைக்கப் பெறுகின்றது . சுய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டதன் காரணமாக இந்நிறுவனம் 2011 இல் 8 மில்லியன் தேறிய இலாபத்தினையும் 2012 இல் 32 மில்லியனையும் இலாபமாக ஈட்டியது. கைத்தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் 2012-2015 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.. | 70 | 102 |
| மாந்தை சோல்ட் லிமிட்டெட் . | உப்பு மற்றும் நொறுக்கப்பட்ட உப்பு, அயடீன் கலந்த உப்புகளை உற்பத்தி செய்தல். | செம்மணி உப்பளத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தியதன் விளைவாக அதன் வருமானம் குறைவடைந்தது. மாந்தை உப்பளத்தில் தற்பொழுது உற்பத்தி செய்யப்படும் மூலப்பொருள் உப்பில் 60 சதவீதமானவை மொத்தமாக விற்பனை செய்யப்பட்டதுடன் குறைந்த இலாபம் பெறப்பட்டதனால் அதன் விற்பனை பெயரிலும் உற்பத்தியிலும் மாற்றத்தை செய்ய வேண்டியுள்ளது. | 39 | 50 |
| சீ நோர் பௌன்டேசன் லிமிட்டட் | மீன் பிடிப் படகுகள், தோணிகள், வள்ளங்கள், மீன்பிடிக் கலன்கள் மற்றும் உபகரணங்கள் போன்றனவற்றைத் தயாரித்தல் | 2012 ஆம் ஆண்டு முடிவில் மீன்பிடிப் படகுத் தயாரிப்புக் கைத்தொழிலின் சந்தைப் பங்கில் 30 சதவீதமும், மீன் பிடி வலைத் தயாரிப்புக் கைத்தொழிலின் சந்தைப் பங்கில் 40 சதவீதமும் காணப்பட்டது. 2012ஆம் ஆண்டில் வருமானம் ரூபா 206 | 213 | 206 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மில்லியன்களாக 36 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்த அதே வேளை, கம்பனியின் மொத்த மொத்த செலவினம் 47 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதற்கு அமைவாக கம்பனியின் நட்டங்கள் 2011 ஆம் ஆண்டில் ரூபா 16 மில்லியன்களிலிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 7 மில்லியன்களாகக் குறைக்கப்பட்டது.. | | |
| வட கடல் கம்பனி | மீன்பிடி உபகரணங்களை தயாரித்தலும் வழங்குதலும், மீனவர்களுக்கான ஒத்துழைப்பு சேவைகளை வழங்குதல். | வருடம் ஒன்றுக்கு 480மெ.தொ மீன்வலை தயாரிக்கப்படுவதுடன் சந்தைப் பங்கில் இது 10 சதவீதமாகும். 2012இல் வருமானம் ரூ.172 மில்லியனாக அதிகரித்ததுடன் செலவினம் ரூ.50 மில்லியனிலிருந்து ரூ.255 மில்லியனாக அதிகரித்தது. இதற்கமைவாக 2011இல் ரூ.1மில் இலிருந்து ரூ.83 மில். ஆக நட்டம் அதிகரித்தது. இதற்கான பிரதான காரணம் ஒழித்துக் கட்டல் செயன்முறை இடம்பெற்றதாகும். வங்கிக் கடன்கள் 2011இல் ரூ.3 மில். இலிருந்து 2012இல் ரூ 20 மில். ஆக அதிகரித்தது | 255 | 172 |
| லங்கா லேயலண்ட் கம்பனி | லங்கா அசோக் லேயலண்ட கம்பனியில் 42 சதவீத பங்கினைக் கொண்டுள்ளது. | லங்கா லேயலண்ட் கம்பனி இலங்கை அரசாங்கத்தினால் முழுமையாக உடமை கொள்ளப்பட்ட நிறுவனமாக 1983இல் தாபிக்கப்பட்டது. இக்கம்பனி அசோக் லங்கா லேயலண்ட் கம்பனியுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டதுடன் அதன் இணைந்த கம்பனியாக மோட்டார் வாகனங்கள் பொருத்துதல் மற்றும் தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டதுடன் பஸ்வண்டிகள், ட்ரக்குகள் என்பவற்றினையும் தயாரித்தது. இணைந்த கம்பனிகளில் 42 சதவீதத்தினை இது கொண்டிருந்தது. பாகொடையில் அமைந்திருந்த காணி மற்றும் கட்டிடங்கள் அதன் பங்குகளாக சேர்த்துக கொள்ளப்பட்டதுடன் பங்கிலாபங்களுக்கான வருமானம் ரூ.81மில் ஆக காணப்பட்டது. இக்கம்பனி எந்தவொரு தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என்ற வகையில் கம்பனியினை ஒழித்துக் | 5 | 86 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டுவதற்கு திறைசேரியினால் ஆலோசனை வழங்கப்பட்டதுடன் அதன் பங்குகளும் மாற்றப்பட்டன. பங்கிலாப வருமானம் பகிரப்படுவதற்கு தேவைப்படவில்லை | | |
| இலங்கை சீமெந்துக் கம்பனி | சீமெந்தினை இறக்குமதி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்தல். | இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினை லங்கா சீமெந்துக் கம்பனியுடன் இணைப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், காங்கேசன்துறை தொழிற்சாலையில் கூட்டு முயற்சிகளினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது . | 120 | 79 |
| இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் | | | 86 | 340 |
| பரந்தன் இரசாயன கம்பனி | இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்து அதனை சுத்திகரிக்கும் பணியில் ஈடுபடுதல் | 2012இல் இக்கம்பனி 2,025 மெ.தொ. குளோரின், 88 மெ.தொ. கோஸ்ரிக் சோடா மற்றும் 17 மெ.தொ. ஹைட்ரோ குளோரிக் அமிலம் என்பவற்றினை விற்பனை செய்துள்ளது. இக்கம்பனி பிரதானமாக குளோரின் மற்றும் அது தொடர்பான உற்பத்திகளை இறக்குமதி செய்து விற்பனை செய்கின்றது . | 198 | 232 |
| தேசிய கடதாசி கம்பனி லிமிட்டெட் | கடதாசிகள், கடதாசி அட்டைகள் மற்றும் அனைத்து வகையான கடதாசிக் கூழிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களையும் விற்பனை செய்கின்றது. | கடதாசி கம்பனி நட்டமடைந்த பொழுதிலும் தொடர்ந்து வாழைச்சேனையில் இயங்கி வருகின்றது. எவ்வாறாயினும் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக 2012 இல் தகவுடைய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். வாழைச்சேனை கடதாசி ஆலை புதுப்பித்தல் செயன்முறையில் ஈடுபடுவதுடன் இயந்திரங்களை முழுத்திறனுடன் இயக்குவதற்கு வசதியளிக்கும் வகையில் ரூ.100மில் 2012-2013காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ளது. 2012ஆம் அண்டில் தேசியக் கடதாசிக் கம்பனியினால் 120,000 மெட்ரிக் தொன் நிறையுள்ள கழிவு செய்யப்பட்ட கடதாசி ஒரு கிலோ கிராம் ரூபா 26ப் படி தென் கிழக்கு ஆசியாவிற்கு ஏற்றுமதி செய்யக் கூடியதாக இருந்துள்ளது. | 181 | 109 |
| லக்திவ பொறியியல் கம்பனி . | பஸ் வண்டி சட்டகங்களைத் தயாரிப்பதிலும் திருத்தி அமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றது | 2011 - 2012 காலப்பகுதியில் ரூ.21மில் இலிருந்து 2012 -2013 காலப்பகுதியில் ரூ.23 மில் ஆக பஸ் திருத்தப் பணிகளிலிருந்து கிடைத்த வருமானம் 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. | 29 | 23 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இதற்குக் காரணம் போதிய நவீன இயந்திரங்கள் காணப்படாமை திறனுள்ள தொழிநுட்ப அலுவலர்கள் கிடைக்காமை காரணமாக 2011இல் 71 பஸ் வண்டிகளுடன் ஒப்பிடுகையில் 2012இல் 52 பஸ்களாக குறைவடைந்தமை ஆகும். 2012 - 2013 காலப்பகுதியில் கம்பனி ரூ.27 மில் ஐ நட்டமாக இழந்தது. அதன் நட்டத்தினை ஈடு செய்வதற்காக வழங்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒத்துழைப்பு ரூ 21 மில். ஆகும். இலங்கை போக்குவரத்துச் சபையினால் பஸ் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றுக்கான கேள்வி காணப்படவில்லை. பொது தொழில் முயற்சிகள் மீதான குழு இலங்கை போக்குவரத்துச் சபையானது அதன் இரட்டை வேலைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளது. செய்தல். | | |

## 2.19 ஆண்டறிக்கைளை சமர்ப்பித்தல் - அரச உடமை தொழில் முயற்சிகள்

| | | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | √ | √ | √ | √ |
| 2 | மக்கள் வங்கி | √ | √ | √ | √ |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | √ | √ | √ | √ |
| 4 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | √ | √ | √ | X |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் | √ | √ | √ | √ |
| 6 | லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி* | √ | √ | √ | √ |
| 7 | பிரதேச அபிவிருத்தி வங்கி | √ | √ | √ | √ |
| 8 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் * | √ | √ | √ | √ |
| 9 | ஊழியர் நம்பிக்கை நிதிய சபை | √ | √ | √ | X |
| 10 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | √ | √ | √ | √ |
| 11 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் * | √ | √ | X | X |
| 12 | இலங்கை மின்சார சபை | √ | √ | X | X |
| 13 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | X | X | X | X |
| 14 | இலங்கை துறைமுக அதிகார சபை | √ | √ | X | X |
| 15 | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | √ | √ | X | X |
| 16 | விமான நிலையம் விமான சேவைகள் இலங்கை லிமிட்டெட் | √ | √ | √ | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் | √ | √ | X | - |
| 18 | மிஹின் லங்கா பிரைவேட் லிமிட்டெட் ** | √ | X | X | - |
| 19 | இலலங்கை போக்குவரத்து சபை | X | X | X | X |
| 20 | அரச பொறியியற் கூட்டுத்தாபனம் | √ | √ | X | X |
| 21 | மத்திய பொறியியல் மதியுரை பணியகம் | √ | √ | X | X |
| 22 | அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம் | √ | X | X | X |
| 23 | மில்கோ பிரைவேட் லிமிட்டெட் | √ | √ | X | - |
| 24 | தேசிய கால்நடை அபிவிருத்தி சபை | √ | √ | √ | X |
| 25 | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | √ | X | X | X |
| 26 | இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் | √ | X | X | X |
| 27 | அரச மருந்தாக்கற் உற்பத்திக் கூட்டுத்தாபனம் | √ | √ | √ | X |
| 28 | ,இலங்கை ஆயுர்வேத மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | √ | √ | √ | X |
| 29 | அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | √ | √ | √ | X |
| 30 | ஸ்ரீ ஜெயவர்தனபுர பொது வைத்தியசாலை | √ | √ | X | X |
| 31 | வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | √ | √ | √ | X |
| 32 | இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம் | √ | √ | X | X |
| 33 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | √ | √ | √ | X |
| 34 | சிலோன்/வேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டெட் | √ | √ | √ | - |
| 35 | கொழும்பு கொமர்ஷல்/வேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டெட் | √ | √ | √ | - |
| 36 | அரச மரக்கூட்டுத்தாபனம் | √ | √ | √ | X |
| 37 | இலங்கை அரச வர்த்தக (பொது) கோப்பரேஷன் லிமிட்டெட் | √ | √ | X | X |
| 38 | வரையறுக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | X | X | X | X |
| 39 | கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் | √ | X | X | X |
| 40 | லங்கா சதொச லிமிட்டெட் | X | X | X | X |
| 41 | அபிவிருத்தி லொத்தர் சபை | √ | √ | √ | X |
| 42 | அபிவிருத்தி லொத்தர் சபை | √ | √ | √ | X |
| 43 | லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிட்டெட் | √ | √ | √ | √ |
| 44 | லங்கா பொஸ்பேட் லிமிட்டெட் | √ | √ | √ | X |
| 45 | அரச அச்சகக் கூட்டுத்தானம் | √ | √ | √ | X |
| 46 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | √ | X | X | X |
| 47 | விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபை | √ | X | X | X |
| 48 | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | X | X | X | X |
| 49 | குருணாகல் பிளான்டேஷன் லிமிட்டெட் | √ | √ | √ | √ |
| 50 | ஜனதா எஸ்டேட்ஸ் அபிவிருத்தி சபை | X | X | X | X |
| 51 | சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட் | √ | √ | √ | √ |
| 52 | களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிட்டெட் | √ | √ | √ | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 53 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | √ | X | X | X |
| 54 | இலங்கை கைப்பணிச் சபை (Laksala) | √ | √ | √ | X |
| 55 | கஹுட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டெட் | √ | √ | √ | - |

## 3. திணைக்களத்தில் பணி புரியும் அலுவலர்களின் இயலளவை விருத்தி செய்தல்

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச தொழில்முயற்சிகள் திணைக்களம் 63 அலுவலர்களின் பங்களிப்புடனும், ஆதரவுடனும் தனது தொழிற்பாடுகளையும் பொறுப்புக்களையும் பூர்த்தி செய்ய முடிந்தது. அவர்களில் பின்வரும் 21 அலுவலர்களும் நிறைவேற்று அதிகாரம் உடையவர்களாவர்.

### 3.1 நிறைவேற்று அதிகாரம் கொண்ட அலுவலர்களின் விபரம் - 2012

| | |
|---|---|
| திருமதி. டீ. எம். ஏ. ஹரஸ்கம | பணிப்பாளர் நாயகம் |
| திரு. ஏ. கே. செனெவிரத்ன | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| திரு. டீ. வீ. வீரசேன | பணிப்பாளர் |
| திரு ஆர். எம். ஏ. ரத்னாயக்கா | பணிப்பாளர் |
| திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார | பணிப்பாளர் |
| செல்வி விசாகா அமரசேகர | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி ஏ. பட்டகொட | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி டப்ளியு ஜீ சந்திரிகா | பிரதிப் பணிப்பாளர் |
| திரு ஆர். எம். விஜேசிங்க பண்டா | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி ஜே பீ பீ லியனகே | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி கே வீ சீ தில்ருக்சி | உதவிப் பணிப்பாளர் |
| திருமதி எஸ் கே எம் கே டீ அல்விஸ் | உதவிப் பணிப்பாளர் |
| திருமதி எல் ஜீ. எஸ் துஷ்யந்தி | உதவிப் பணிப்பாளர் |
| திருமதி எஸ். ஏம். ராஜபக்ச | உதவிப் பணிப்பாளர் |
| திரு ஆர். ஏ. எல். யு. குமார | உதவிப் பணிப்பாளர் |
| திருமதி ஜீ. எம். ஐ. யு. பண்டார | உதவிப் பணிப்பாளர் |
| திரு. கே. எஸ். பீ. ரூபசிங்க | உதவிப் பணிப்பாளர் |
| திருமதி டீ. ஜீ. என். குமாரி | உதவிப் பணிப்பாளர் |
| திரு. கே. எஸ். ஏம். டீ சில்வா | உதவிப் பணிப்பாளர் |
| திருமதி டப்ளியு கே டீ. டன்ஸ்டன் | உதவிப் பணிப்பாளர் |
| திரு ஏ ஆர் விக்கிரமசிங்க | உதவிப் பணிப்பாளர் |
| திருமதி. கே மெனிகே | நிர்வாக உத்தியோகத்தர் |

இத்திணைக்களத்தில் பணி புரியும் அநேகமான அலுவலர்கள் வர்த்தக நிர்வாகம், கணக்கியல், பொருளியல், சந்தைப்படுத்தல், அரச முகாமைத்துவம் போன்ற துறைகளில் பட்டப் படிப்பினை மேற்கொண்டுள்ள அதே வேளை, பல்வேறு துறைகளில் முதுமாணிப் பட்டப் படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிகளையும் மேற்கொண்டவர்களாக உள்ளனர். நான்கு நிறைவேற்று அதிகாரம்

கொண்ட உத்தியோகத்தர்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உதவி அங்கத்தவர்களாகவும் உள்ளனர்.

**2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திலிருந்து விலகிச் சென்ற அலுவலர்கள்**

| | |
|---|---|
| திரு. ஆர். எஸ். ஆட்டிகல | பணிப்பாளர் நாயகம் |
| திருமதி டீ. சேனாநாயக்கா | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| திரு வீ. எம் அமீன் | பணிப்பாளர் |
| திருமதி அனோமா நந்தனி | பணிப்பாளர் |
| திரு யு விஜிதா பெரேரா | உதவிப் பணிப்பாளர் |
| திரு டீ. பீ. பெரேரா | நிர்வாக உத்தியோகத்தர் |

## 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இட மாற்றம் செய்யப்பட்ட பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை

| பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|
| | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்துக்கு மாற்றல் பெற்று வந்தவர்கள் | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திலிருந்து மாற்றல் பெற்றுச் சென்றவர்கள் |
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| பணிப்பாளர் | 01 | 03 |
| உதவிப் பணிப்பாளர் | 03 | - |
| நிர்வாக அலுவலர் | -01 | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் | -- | - |
| ஆராய்ச்சி உதவியாளர் | -- | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 07 | 07 |
| சாரதிகள் | 06 | 07 |
| அலுவலக உதவியாளர்கள் | 05 | 02 |

## 3.2 பதவியணி நிலைமை - 2012

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போது இருக்கும் பதவியணி | வெற்றிடம் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 02 | 01 | 01 | - |
| பணிப்பாளர் | 06 | 03 | 03 | - |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | 13 | 16 | - | 03 |
| அபிவிருத்தி உதவியாளர் | 11 | 04 | 02 | - |
| நிதி ஆய்வாளர் | 03 | 03 | - | - |
| நிர்வாக அலுவலர் | 01 | 01 | 07 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 21 | 16 | 05 | - |
| வரவேற்பாளர் | 01 | 01 | - | - |
| தரவு நிரற்படுத்துனர்கள் | 02 | - | 02 | - |
| சாரதிகள் | 08 | 07 | 01 | - |
| அலுவலக உதவியாளர்கள் | 06 | 10 | - | 04 |
| மொத்தம் | 75 | 63 | 19 | 07 |

## 3.3 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பதவியினர் பயிற்சி

| | பயிற்சியின் தலைப்பு | பங்கு பற்றியோரின் எண்ணிக்கை | காலப்பகுதி |
|---|---|---|---|
| உள்நாட்டு | ஆய்வு முறைமையியல் மற்றும் தரவு ஆராய்ச்சி தொடர்பான செயலமர்வு | 04 உப/பிப/நிஆ | 02 நாட்கள் |
| | கணணிமயப்படுத்தப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட அரசாங்க கணக்கீட்டு முறைமை (CIGAS) | 02 உப//முஉ | 06 நாட்கள் |
| | அரச பயன்பாட்டு விலையியல் கொள்கைகள், பிரச்சினைகள், தெரிவுகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் | 04 பிப/ உப | 01 நாள் |
| | சம்பள மாற்றங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 01 முஉ | 01 நாள் |
| | அடிப்படை கணணித் திறன்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 01 முஉ | 05 நாட்கள் |
| | அரச பெறுகைகளும், மற்றும் ஒப்பந்த நிர்வாகமும் தொடர்பான டிப்ளோமா பாடநெறி | 01 மேபநா | 03 மாதங்கள் |
| | வினைத் திறனான கணக்காய்வு தொடர்பான மாநாடு | 02 பிப/உப | 01 நாள் |
| | கொடுப்பனவுகளும் மற்றும் வருமானச் சேகரிப்புக்களும் தொடர்பான வரியின் தாத்பரியம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 01 முஉ | 01 நாள் |
| | நடைமுறை தொடர்பான பயிற்சி | 07 ப | 04 நாட்கள் |
| | இலங்கை நிதி அறிக்கையிடல் தராதரங்கள் | 01 ப | 01 நாள் |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் தொடர்பான மாநாட்டுத் தொடர் | 01 ப | 03 நாட்கள் |
| | சமூகவியலில முதுமாணிப் பட்டம் | 01 அஉ | 01 வருடம் |
| வெளிநாட்டு | காப்புறுதி ஒழுங்கு முறைகளும், மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டமும் மோல்ட்டா | 01 உப | 05 நாட்கள் |
| | அரச தனியார் பங்கேற்புகள் (PPP) நாட்கள் 2012 வினைத் திறனுள்ள அரச தனியார் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான அபிவிருத்தி அடைந்து வரும் நிறுவனங்கள் - சுவீட்சர்லாந்து | 01 உப | 04 நாட்கள் |
| | அரச சேவை முகாமைத்துவம் தொடர்பான சிடாஸ் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - சீனா | 01 பிப | 05 நாட்கள் |
| | நிதி ரீதியான உறுதித் தன்மைக்கான பொருளாதாரக் கொள்கைகள் - சிங்கப்பூர் | 01 பிப | 12 நாட்கள் |

*மூலம்: அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்*

## 4. நிதி முகாமைத்துவம்

அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் தொடர்புடைய எண்ணிக்கைகளுடனான 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடும், மற்றும் உண்மைச் செலவினமும் பின்வருமாறு:

### 4.1 வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடும், உண்மைச் செலவினமும் - 2011 & 2012

**ரூபா. 000**

| | **உண்மைச் செலவினம்** | | **தேறிய வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு** | |
|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2011** | **2012** |
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 25,335 | 26,343 | 26,400 | 26,490 |
| மீண்டெழும் செலவினம் | 15,519 | 17,862 | 16,364 | 21,885 |
| **மொத்தம்** | **40,854** | **44,205** | **42,764** | **48,375** |
| **மூலதனச் செலவினம்** | | | | |
| **புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | | | | |
| 2001 கட்டடிடமும் கட்டமைப்பும் | - | 0 | - | 1,500 |
| 2002 பொறித் தொகுதியும், இயந்திரமும், உபகரணங்களும் | 347 | - | 500 | - |
| **கொள்வனவு** | | | | |
| 2102 தளபாடமும் அலுவலக உபகரணங்களும் | 86 | 1,942 | 100 | 2,100 |
| **இயலளவுக் கட்டமைப்பு** | | | | |
| 2401 பயிற்சியும், இயலளவுக் கட்டமைப்பும் | 851 | 389 | 900 | 1,000 |
| **மொத்தம்** | **1,284** | **2,331** | **1,500** | **4,600** |

*மூலம்: அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்*

## 4.2 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு - 2012

### அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு வரையறையும், உண்மையான கணக்கும்

| | அங்கீகரிக்கப்பட்ட வரையறை | ஆண்டு இறுதியில் உண்மையான கணக்கு |
|---|---|---|
| செலவினத்தின் கூடிய வரையறை | 4,000,000.00 | 1,913,495.00 |
| பெறுகைகளின் கூடிய வரையறை உண்மை வரவுகள் | 1,500,000.00 | 1,965,026.68 |
| கூடிய படுகடன் மீதி வரையறை | 18,000,000.00 | 11,525,529.63 |

*மூலம்: அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்*

- 2012 ஆம் ஆண்டிற்கான அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருடாந்த இணக்கக் கூற்று ஆகியன கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.